வியாழக் கிழமை, 1974 ஏப்ரல் 11

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Tamil Nadu Tourism Development Corporation

* 301 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education be pleased to state the steps taken by the Tamil Nadu Tourism Development Corporation to improve Tourist Traffic in the State?

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவரும் விதத்தில் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழ்நாட்டில் முக்கியமான இடங்களில் சுற்றுலா மாளிகைகளை நடத்தி வருகிறது. அம்மாளிகைகளில் நவீன வசதிகள் அனைத்தும் உள்ளன. சுற்றுலா மாளிகைகள் அனைத்திலும் உணவகங்கள் உள்ளன. சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஏர்க்காடு, உதகமண்டலம், கோடைக்கானல் ஆகிய இடங்களிலுள்ள சுற்றுலா மாளிகைகளிலும், கன்னியாகுமரி 'கேப்' ஓட்டலிலும், மதுரை அருந்தும் அறைகளும் தொடங்கப் பட்டுள்ளன.

[1974 ஏப்ரல் 11

மேலும் இக்கழகம், சென்னையிலிருந்து மாமல்லபுரத்திற்கு அன்றுடம் திட்ட மிட்ட சுற்றுலா பயணத்தையும், தமிழ்நாட்டில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்திற்கும் செல்வதற்கு 7 நாட்கள் திட்டமிட்ட பயணத்தை மாதத்திற்கொருமுறையும் நடத்துகிறது.

இதைத்தவிர, இக்கழகம் 1974 ஜனவரி திங்களில் சென்னை மாநகரில் பொங்கல் சுற்றுலா விழா போருட்காட்சியை நடத்தியுள்ளது. இப்போருட் காட்சியை ஆண்டுதோறும் நடத்தக் கருதப்பட்டுள்ளது.

திரு. எஸ். பலராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சுற்றுலா பொருட்காட்சியை மாவட்டங்கள் வாரியாக நடத்துவதற்கு, அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா? வட்டஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலைப் பகுதியைச் சுற்றுலா காட்சி இடமாக அமைக்க அரசாங்கம் பரிசீலித்து வருகிறதா? அவ்வாறு ஒரு எண்ணம் இருப்பதாக நான் இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு அறிய வந்தது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சி இப்பொழுது சென்னையில் மட்டும்தான் நடைபெற்றுள்ளது. பொங்கல் சுற்றுலா விழா திருச்சி, மதுரை, மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் மட்டும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டி ருக்கிறது. ஆண்டுதோறும் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் பொங்கல் சுற்றுலா விழாவையும், கலை நிகழ்ச்சிகளையும் போருட்காட்சியையும் வைக்க லாமா என்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது.

ஏலகிரி மலைப்பகுதியைச் சுற்றுலா இடமாக அமைத்திடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்பதுபற்றிய தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்ல இயலும்.

THIRU S. NARAYANASWAMY : Sir, will the Hon. the Minister for Tourism consider the question of making life a little more easy for residents in hill stations and at least see that the roads are kept in good repair? The roads there which are used both by tourists and by the people who live there are not being repaired at all. Personally, for the last eight years, I have been asking for a road to be laid to the Kurinji Andavar Temple at Kodaikanal and nothing has been done. The Hon. Minister is well aware of the difficulties. Will something be done in the matter because the Township Council does just nothing at all?

1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் கொடைக்கானல், உதகை போன்ற மலை வாசஸ்தலங்கள். அங்கேயிருக்கக்கூடிய நகராட்சிகள், நகரியங்கள்தான் சாலை பராமரிப்பு போன்ற வேலைகளைக் கவனித்துக்கொண்டு வருகின்றன. அந்த நிர்வாகங்களுக்கு ஏற்கெனவே குறிப்பு அனுப்பி, சாலைப் பராமரிப்புகளில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. அது விஷயத்தில் சுற்றுலா வாரியமும் ஓரளவு கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. பொதுவாக நிதி வசதியை இன்னும் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அவர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசும் கவனம் செலுத்தி வருகிறது.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, கொடைக்கானல், ஊட்டி போன்ற மலை வாசஸ்தல நகராட்சிகளில் போதிய நிதி வசதி இல்லை. ஆகவே அந்த சுற்றுலாத் துறையினருக்கு இன்னும் அதிகப் பணம் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அது மத்திய அரசாங்கமோ, மாநில அரசாங்கமோ, எதுவாகயிருந்தாலும். இன்னும் நிதி உதவி செய்து அந்தச் சாலைகளைச் சரிவரப் பராமரித்தால் மேலும் சுற்றுலாப் பயணிகளை நாம் கவர முடியும் என்பதை நான் அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதையறிந்து அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் கூறியதுபோல், கொடைக்கானல், ஏற்காடு, உதகை மண்டலம் போன்ற இடங்களில் உள்ள நகராட்சிகளில் நிதி வசதி போதுமான அளவுக்கு இல்லை. மத்திய அரசு சுற்றுலாத் துறைச் செலவுக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக நிதி உதவி செய்தால்தான் அவைகளை நல்ல முறையில் பராமரிக்க முடியும். ஆகவே நிதி ஒதுக்கீடு குறித்துத்தான் சங்கடம் இருந்து வருகிறது. எந்த முறையில் இவற்றைச் சீர் செய்ய முடியும் என்பதில் அரசு கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் கவரும் வகையில், வெளிநாடுகளிலிருந்து வருகின்றவர்கள் உடன் அறிந்துகொள்ளும் பொருட்டு, தலைநகர் டெல்லி விமான நிலையத்திலும், இன்னும் இதர முக்கியமான இடங்களிலும் தமிழகத்தில் அமைந்துள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப்பற்றிய விவரங்கள் அடங்கிய விளம்பரங்களை வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். அம்மாதிரிச் செய்தால், சுற்றுலா வரும் பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்படிப் பட்ட விளம்பரங்கள் இப்பொழுது செய்யப்படவில்லை. சுற்றுலா இடங்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய குறிப்பேடுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. போஸ்டர் முதலியவைகள் எல்லாம் அனுப்பப்படுகின்றன. சுற்றுலா சம்பந்த மாக நடைபெறுகின்ற பல்வேறான விழாக்களில், சுற்றுலா இடங்களைப்பற்றிய விளம்பரங்கள் போடப்படுகின்றன. இது விஷயத்தில் மத்திய அரசும் உதவி செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, recently we saw in the papers that there was a move to have a rope-railway connecting Kodaikanal with Palni. May I know at what stage this move is?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்படிப் பட்ட ஒரு கருத்தை, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு விழாவில் கலந்துகொண்ட ஒருவர் கூறியதாக நானும் பார்த்தேன். பழநி கோவில் தேவஸ்தானம் கொடைக்கானலுக்கும் பழநிக்கும் இணைப்பு செய்ய முயற்சிப்ப தாகக் கூறப்பட்டிருக்கிறது. அதுபற்றி சுற்றுலாத் துறைக்கு எந்த விவரமும் கிடைக்கவில்லை.

(பிற்பகல் 4-10)

Development of Tourism

* 302 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRUVALARGAL G. SWAMINATHAN and S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government have suggested to the Centre, to allow them to import small planes from Switzerland for the purpose of developing tourism in the State;

(*b*) if so, the number proposed to be imported; and

(*c*) their total value?

சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்துதல்

திரு. எல். பலராமன் (திரு. ஜி; சுவாமிநாதன், திரு; எஸ்; வெள்ள பாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த சுவிட்சர்லாந் திலிருந்து சிறு ரக விமானங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கும்படி மத்திய அரசிடம் மாநில அரசு கருத்துத் தெரிவித்துள்ளது உண்மையா?

1974 ஏப்ரல் 11]

(இ) ஆமெனில், எத்தனை விமானங்கள் இறக்குமதி செய்யக் கருதப் பட்டுள்ளது?

(உ) அவற்றின் மொத்த மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *(அ) இல்லை.*

(இ) & (உ) இவ்வினை எழவில்லை.

Request from the Chairman, Tourism Development Corporation

* 303 *Q.*—THIRU ERA SAMBASIVAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any request has been received from the Chairman, Tourism Development Corporation to nationalise all taxis plying in the City of Madras; and

(*b*) the action proposed to be taken thereon?

சுற்றுலா அபிவிருத்திக் கழகத் தலைவரிடமிருந்து வேண்டுகோள்

திரு. இரா. சாம்பசிவம்: *மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

(அ) சுற்றுலா அபிவிருத்திக் கழகத் தலைவரிடமிருந்து சென்னை நகரில் டாக்சிகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *(அ) இல்லை.*

(இ) வினை எழாது.

Resolutions passed by the Tamil Nadu Retired Teachers Association

* 304 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the resolutions passed by the Tamil Nadu Retired Teachers Association at their Conference held at Kanchipuram on 31st March 1973 have been brought to the notice of the Government;

(*b*) if so, the details of the resolutions; and

(*c*) the action proposed to be taken thereon?

தமிழ் நாடு ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்க மாநாட்டின் தீர்மானங்கள்

திரு. எல். பலராமன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ் நாடு ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்கத்தினர் 31-3-1973 அன்று காஞ்சிபுரத்தில் நடத்திய மாநாட்டின் தீர்மானங்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளனவா?

(இ) ஆமெனில், அத்தீர்மானங்கள் என்ன?

(உ) அவை மீது என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) & (உ) ஒரு விவர அறிக்கை @ அவையில் வைக்கப்பட்டுள்ளது.

B.T. Teachers

* 305 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Governmhent have ordered in Memorandum No. 9698/L1/73, Education, dated 20th October 1973 that the B.T. Teachers working in Secondary Grade positions in Government 'B' Wing and Private High Schools should be given first preference in the appointment of 1,200 B.T. teachers in 'Half-a-million Scheme'; and

(*b*) if so, the number of teachers so far selected and appointed?

பி.டி. ஆசிரியர்கள்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அரசு -பிரிவு உயர்நிலைப் பள்ளிகளிலும், தனியார் உயர்நிலைப் பள்ளிகளிலும் இடைநிலைத்தர ஆசிரியர்களாகப் பணியாற்றும் பி.டி. ஆசிரியர்களுக்கு, "ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தில்" 1,200 பி.டி.

@ 115–116 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 ஏப்ரல் 11]

ஆசிரியர்களை நியமிப்பதில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கல்வித் துறையின் 20-10-1973ஆம் நாளிட்ட குறிப்பாணை எண் 9698/ LI/ 73-ல் அரசு ஆணையிட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், இது வரை எத்தனை ஆசிரியர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டனர் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். ஆனால் ஒவ்வொரு நிருவாகத்துக்கும் எந்தப் பாடத்தில் பி.டி. தேர்ச்சி பெற்ற ஆசிரியர் தேவையோ அத்தகைய செகண்டரி கிரேடு பதவியிலுள்ள ஆசிரியர் அந்தப் பாடத்தில் பி.டி. தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டுமே அத்தகைய முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

(இ) 21.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, சில இடங்கள் காலியாக இருக்கின்றன என்றும், கல்விச் செயலாளர் அவர்கள் ஒதுக்கீட்டுத் தொகையை மனதில் கொண்டு, பட்டதாரி ஆசிரியர், இடைநிலை ஆசிரியர் என்ற வேறுபாடு இல்லாமல், அந்த இடங்களுக்குத் தேவையான ஆசிரியர்களைப் போட்டு நிரப்பிக் கொள்ளலாம் என்றும் கல்வி இயக்குநருக்கு குறிப்பு அனுப்பினார்களா ? அப்படியானால், கல்வி இயக்குநர் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 9,923 இடங்கள் என்ற போது, ஹையர் கிரேடு 500, செகண்டரி கிரேடு 6,928, உடற் பயிற்சி ஆசிரியர் இரண்டாம் கிரேடு 428, கைத்தொழில் ஆசிரியர்கள் 797, பி.டி. சிறப்புப் பதவியில் பி.டி. ஆசிரியர்களுக்கு 911, முதல்நிலை தமிழ் ஆசிரியர் 279, உடற்பயிற்சி முதல் கிரேடு 5, ஆக 9,923 இடங்கள் இருந்தபோது, அதில் பி.டி. ஆசிரியர்களுக்கு 911 ஒதுக்கப்பட்டது. அந்த இடங்கள் நிரப்பப் பட்டிருக்கின்றன. அதில் ஏதாவது காலியிருந்தால், அதைப்பற்றி விவரம் தெரிந்தால், தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்பட்ட 10,500 இடங்களில், காலி இடங்கள் இருக்கின்றன. அவற்றை நிரப்புவதில் பட்டதாரி ஆசிரியர், இடைநிலை ஆசிரியர் என்ற வித்தியாசமில்லாமல் ஒதுக்கீட்டுத் தொகையை மனதில் கொண்டு, ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்தலாம் என்று கல்விச் செயலாளர் அவர்கள் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுத்திருந்தார். அதைப்பற்றி நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது ?

[1974 ஏப்ரல் 11

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒதுக்கீட்டுத் தொகையை வைத்துக் கணக்கிடும்போது, 9,923 பேரை நான் சொன்ன அடிப்படையில் தான் நியமிக்க முடிகிறது. 10,000 அல்லது 10,500 என்றாலும், ஒதுக்கீட்டுத் தொகையை நான் சொன்ன அந்த வகையிலே பிரிக்கிறபோது, 9,923 பேருக்குத் தான் வருகிறது. பி.டி. ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்பட்ட 911 இடங்களில் காலியிருக்குமேயானால், அதுபற்றி கவனிக்கலாம்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, 'B' பிரிவு பள்ளிகளில் பணியாற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பதவியில் பணியாற்றும் பட்டம் பெற்ற பி.டி. ஆசிரியர்களை நியமிப்பதில், ஐந்து லட்சம் பேருக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. இதே மாதிரி செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக இருந்து தமிழ் ஆசிரியர்களாகத் தேறியிருப்பவர்களுக்கு, புதிதாக தமிழ் ஆசிரியர்கள் பதவிகளில் நியமிப்பதற்கு முன்னுரிமை வழங்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, செகண்டரி கிரேட் ஆசிரியர் பதவியில் உள்ள பட்டம் பெற்ற பி.டி. ஆசிரியர்களுக்கு எப்படி முன்னுரிமை வழங்கப்படுகிறதோ, அதைப் போல தமிழ் ஆசிரியர்களாகப் படித்திருப்பாரேயானால், அவர்களுக்கும் முன் உரிமை வழங்கப்படுமா என்பது தானே அங்கத்தினருடைய கேள்வி. அது கவனிக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, 5 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தில், 1,200 பி.டி. ஆசிரியர்களில், தொளாயிரத்துச் சில்லரை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 3, 4 ஆண்டுகள் தொடர்ந்து 10 (எ) (1) விதிப்படி வேலை பார்த்தவர்கள் இருக்கிறார்கள். 5 லட்சம் பேருக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், பி.டி. ஆசிரியர்கள் புதிதாக சிலர் நியமிக்கப்படுகிறபோது, இப்படி நான்கு ஆண்டுகள் வேலை பார்த்தவர்கள் வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அப்படி கொல்லங்கோடு உயர்நிலைப்பள்ளி, இன்னும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பல பள்ளிகளிலிருந்து 25, 30 ஆசிரியர்கள் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இனிமேல் வருகிற இடங்களில் முன்னுரிமை கொடுத்து, எடுத்துக்கொள்ள அரசு ஆராயுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த நிலைமைகள் என்ன என்று தெரியவில்லை. அதுபற்றி விளக்கங்கள் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற நிலைமைகள் இருக்குமேயானால், கவனிக்கலாம்.

1974 ஏப்ரல் 11]

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இயங்கி வரும் நடுநிலைப் பள்ளிகளில் சில தமிழ் ஆசிரியர்களையும், உடற்பயிற்சி ஆசிரியர்களையும் நியமித்துக்கொள்ளலாம் என்ற விதிமுறை இருக்கிறது. அதற்குட்பட்டு பள்ளிகளில், இன்னின்ன பள்ளிகளில் காலியிருக்கிறது, அவைகளை நியமித்துக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று டி.இ.ஓ.விடம் கேட்கின்றபோது, அரசிடமிருந்து உத்தரவு பெறவேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த நடைமுறையைத் திருத்தி, டி.இ.ஓ. அவர்களே அங்கே உத்தரவு வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதில் இருக்கிற சிக்கல் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால், நிலைமைகளை அறிந்து சொல்லலாம்.

Radiation Medicine Centre

* 306 Q.—THIRU V. VENGA (on behalf of THIRU K. ARIVAZHAGAN) : Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under consideration to start a Radiation Medicine Centre in the State?

கதிரியக்க முறை மருத்துவ நிலையம்.

திரு. வி. வெங்கா (திரு. க. அறிவழகன் சார்பில்) : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

மாநிலத்தில் கதிரியக்க முறை மருத்துவ நிலையம் ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

Loss of Eye-sight due to lack of nutrition

* 307 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that children have lost their eye-sight due to lack of nutrition in Tamil Nadu; and

(*b*) if so, the total number of children affected?

[1974 ஏப்ரல் 11

சத்துணவு இன்மையால் கண்பார்வை இழப்பு

திரு. எல். பலராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ் நாட்டில் சத்துணவு இல்லாமல் குழந்தைகள் கண் பார்வை இழந்தனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) சத்துணவு குறைந்ததால் கண்பார்வை இழக்கலாம் என்பது உண்மைதான்.

(இ) கணக்கு எடுப்பது சுலபமல்ல. தமிழ்நாட்டின் அவ்வளவு குழந்தைகளையும் பார்வையிட்டு பரிசோதித்து கணக்கெடுக்க காலம் செல்லும். மிகுந்த பொருட்செலவும் ஏற்படும். ஆனால், மதுரையில் மாத்திரம் எடுத்த கணக்கு பின்வருமாறு:—

மதுரை அரசு ஏர்ஸ்கின் மருத்துவமனை, கண் சிகிச்சைப் பிரிவில் 1971 ஜூன் திங்களிலிருந்து 1973 செப்டம்பர் வரை கண்டறியப்பட்ட வைட்டமின் ஏ, சத்துணவு ஆகியவை—

குறைந்துள்ள நோயாளிகளின் எண்ணிக்கை ..	4614
சத்துணவு குறைந்ததன் காரணமாக கண் பார்வை இழந்தவர்கள்	350
கண் சிகிச்சைப் பிரிவில் அகநோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்பட்டவர்கள்	325

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இது போன்ற இளமையான குழந்தைகள் கண் பார்வை இழப்பதைத் தவிர்க்க, பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளுக்காவது வைட்டமின் மாத்திரைகளைக் கொடுக்க அரசு பரிசீலிக்குமா? அதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் போன்ற மருத்துவமனைகளுக்குக் கொண்டுவரப்படுகின்ற குழந்தைகளுக்கு, அவர்களுடைய உடல் வலிவு குறைவு காரணமாக, சத்துணவு குறைவு காரணமாக பார்வை பாதிக்கப்படும் என்று தெரியுமானால், உரிய மாத்திரைகள் தர இடமிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், குழந்தை பிறந்தவுடன் தாய்க்கே கூட, இந்த வைட்டமின் 'ஏ' சத்து உள்ள மருந்துகள் தருவதன் மூலமாக, குழந்தைகள் பாதிக்கப்படாமலிருக்க வழி காணமுடிகிறது. பொதுவாக நீண்ட காலமாக குழந்தைகளை வளர்ப்பதில், அவர்களுக்கு கீரை, வேர்க்

கடலை உருண்டை, பருப்பு முதலிய சத்துணவு தருவதை மறந்துவிடுவார்களேயானால், அந்தக் குழந்தைகள் 7, 10 வயதில் பார்வை இழந்து பாதிக்கப்படுகின்றன. எனவே பெற்றோருக்கு அறிவூட்டுவதன் மூலமாக, பொதுப் புணர்ச்சியை ஊட்டுவதன் மூலமாகத் தான் இந்தப் பெரிய பாதகத்தைத் தவிர்ப்பது எளிதாகும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, இந்த மாதிரி இளங் குழந்தைகளுக்குச் சத்துணவு குறைவாக இருக்கிறது என்ற காரணத்தின் அடிப்படையில், அறநிலையத் துறையில் கோவில்களில் குழந்தைகளுக்குப் பால் வழங்குகிற திட்டத்தை அறநிலைய அமைச்சர் அவர்கள் துவக்கினார்கள். அம் மாதிரி எத்தனை ஆலயங்களில், எவ்வளவு குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அது நல்ல காரியம் தான். நான் அறநிலைய அமைச்சரைக் கேட்டு அறிந்ததான் தங்களுக்கு பதிலளிக்க வேண்டும்.

THIRU A. R. DAMODARAN: Sir, since milk may not be available and as the Hon. Minister mentioned that groundnut contains Vitamin 'A', may he suggest to the Hon. the Minister for Religious Endowments that groundnut balls at least be distributed to young children?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பழனி கோவிலில் எல்லாம் ஒரு காலத்தில் சுண்டைக்கடலை வழங்குவதை பழக்கமாக வைத்திருந்தார்கள். பயறு, சுண்டைக்கடலை, வேறு சில வெல்ல உருண்டைகளைக் கலந்து வழங்குகின்ற பழக்கம் உண்டு. பொரி உருண்டை என்று ஏழைகளுக்கு மிகக் குறைந்த விலையில் கிடைக்கிற உருண்டை உண்டு. சத்து மாவு என்று ஏழைத் தாய்மார்கள் குழந்தைகளுக்காகத் தயாரித்து வைத்து மாலை நேரத்தில் தின் பண்டத்திற்குப் பதிலாக அதை வழங்குவார்கள். இப்படி பல நல்ல பழக்கங்கள் இருந்தன. அவையெல்லாம் நம்மைவிட்டு விலகிப் போய், நம்மை கண்பார்வை இழக்கச் செய்து வருகின்றன என்பதைத் தான் இந்த நாட்டில் உள்ளவர்கள் உணர வேண்டும்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே. சென்னை நகரில் ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்வது ஆரம்பிக்கப் பட்டது. அந்தப் பரிசோதனையில் முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு படிக்கின்ற குழந்தைகள் எவ்வளவு பேருக்குக் கண்பார்வை மங்கியிருக்கிறது

[1974 ஏப்ரல் 11

என்று ஏதாவது விவரங்கள் கிடைக்கப்பெற்றதா? சிறு குழந்தைகளுக்குக் கொடுக்கின்ற மதிய உணவில் வைட்டமின் 'ஏ' கலந்து கொடுக்கிற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு நிலையத்திற்கு 50 பேருக்கு, கருவுற்ற தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் உணவு வழங்கப்படுகிறது. அதைப் போல துணை நிலையங்களிலும் வழங்கப்படுகிறது. பள்ளிக்கூடத்திலும் மதிய உணவுத் திட்டத்தின் பெயரால், சத்துணவு எந்த வகையில் அமைய வேண்டுமோ அந்த வகையில் கவனித்து வழங்கப்படுகிறது. சென்னை நகரில் குழந்தைகளுக்காக, பள்ளி செல்லுகின்ற சிறுவர்களுக்காக நடத்தப்படுகின்ற ஆய்வு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து புள்ளிவிவரங்கள் தனியாகத் தரக்கூடிய வாய்ப்பு இப்போது எனக்கில்லை. ஆய்வில் குழந்தைகளின் கண் பார்வை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரியுமானால், பாதிக்கப்பட்டவர்களுக்கு கண் மருத்துவ மனையில் தகுந்த சிகிச்சை பெற வழி செய்யப்படுகிறது. அந்தக் குழந்தைகளுக்கு தகுந்த சத்துணவு தர பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. அந்தப் பணி முழுவதும் நிறைவேறிவிட்டது என்று கருத முடியாது. ஓரளவுக்கு பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு வரக்கூடிய குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் சத்துணவு கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களின் அறியாமையின் காரணமாக, பெரும்பாலான தாய்மார்கள் சுகாதார நிலையத்திற்குக் குழந்தைகளைக் கொண்டுவருவதில்லை. எனவே ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருக்கின்ற டாக்டர்கள் வாரத்திற்கு ஒரு கிராமத்திற்குச் சென்று, குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் சத்துணவு, போலியோ இன்ஜெக்ஷன் வழங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த சத்துணவு வழங்கும் திட்டத்தை டாக்டர் மேற்பார்வையில்தான் செயலாற்ற முடியும். டாக்டர்களுக்கு உள்ள பல்வேறு பணிகளுக்கிடையில் ஒவ்வொரு துணை நிலையத்திலும் வழங்கப்படுகிற முறை இருப்பதன் காரணமாக, எப்படியோ 30 பேருக்கு, 25 பேருக்கு வழங்கியிருக்கிறார்களா என்று பார்க்க முடியுமே தவிர, நேரடியாக டாக்டர்களே நிறைவேற்றுவது என்பது, ஏறத்தாழ ஒரு லட்சம் மக்கள், 80 ஆயிரம் மக்கள் உள்ள ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள டாக்டர்களால் செயல்படக் கூடியதல்ல. ஆனால் குழந்தைகளுக்குப் போடவேண்டிய ஊசிகளைப் பொறுத்த வரையில், பிறந்துவிட்ட ஒவ்வொரு

1974 ஏப்ரல் 11]

குழந்தையையும் மருத்துவ மனைக்கு மாதத்தில் ஒரு நாள் வரச்செய்து ஊசி போடலாம். அதற்குக் கூட பெற்றோர்கள் ஒத்துழைத்தால் தான் நிறை வேறுமே தவிர, பெற்றோர்களுக்கு ஒத்துழைக்கின்ற கருத்து உருவாகாமல் இருக்குமேயானால், டாக்டர்களால் மட்டும், இந்த நல்ல காரியங்களை நிறை வேற்ற முடியாது.

(பிற்பகல் 4-20)

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த அலுவலர்கள்—கிராம சேவக்குகள் போன்றவர்கள் கிராம மக்களுடன், பெற் றோர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் குழந்தைகளை எடுத்துச் செல்லும்படி யாக பெற்றோர்களைத் தூண்டிவிடும் பணியை அவர்கள் மற்ற பணிகளுடன் சேர்த்துச் செய்ய வேண்டுமென்று, உள்ளாட்சித் துறை மூலமாக அரசாங்கம் உத்தரவிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்போதேகூட ஒன்றியத்திலே 'Health Inspector' என்ற பெயரிலும், 'Family Planning Extension Educator' என்ற பெயரிலும் பல பேர் பணி யாற்றுகிறார்கள். 'Health Visitors' 'Maternity Assistant' என்ற பெயரிலும் பல பேர் பணியாற்றுகிறார்கள். அவர்களுடைய பொறுப்பு, இந்தக் குழந்தைகளுடைய நலத்தைக் கவனிப்பதற்கு பெற்றோர்களிடம் சொல்ல வேண்டியதைச் சொல்லி, அந்தக் குழந்தைகள் பெற வேண்டிய வசதிகளைப் பெற்றுக்கொள்ளச் செய்யவும், வேறு வகையிலே பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்குமானால், இப்படிப்பட்ட சத்துணவைப் பற்றி எடுத்துச் சொல்வது மாகும். ஆனால் எதிர்காலத்தில் குழந்தைகளைப் பெற்றவர்கள் யாராக இருந்தாலும், அந்தக் குழந்தைகளுக்கு இந்த அளவாவது சத்துணவு தந்து அவைகள் வளர்க்கப்பட வேண்டுமென்பதை அறிவுறுத்த 'Multi-purpose worker' என்ற பெயரிலே 'Nutrition, Health, Medicine Family Planning' ஆகிய துறைகளில் பணியாற்றத்தக்க விதத்தில், அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டுமென்ற ஒரு கருத்து இருக்கிறது. இப்போது கூட அவர்கள் நினைத்தால் அவர்களுக்கு ஆர்வம் இருக்குமானால், நல்ல முறையில் நிறைவேற்றலாம். ஆனால் பொதுவாக என்ன காரணமோ தெரியவில்லை, கிராம மக்கள் மதிக்கத் தக்க வகையில் அவர்கள் நடந்து, அவர்களுக்கு அறிவுரை சொல்லும் வகையில் ஒரு தகுதியை, ஒரு சூழ்நிலையை அவர்களுள் பலர் தேடிக்கொள்ளவில்லை.

[1974 ஏப்ரல் 11

Medical Colleges

*308 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Health be pleased to state the names of the Medical Colleges in the State (i) which have been recognised and (ii) which have not been recognised by the Medical Council of India?

மருத்துவக் கல்லூரிகள்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : 'மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இந்திய மருத்துவக் கழகத்தால், (i) இம்மாநிலத்தில் ஏற்பளிக்கப் பட்டுள்ள, (ii) ஏற்பளிக்கப்படாமலுள்ள மருத்துவக் கல்லூரிகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) சென்னை மருத்துவக் கல்லூரி சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை, மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி தஞ்சாவூர்.

(இ) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, ஏற்பளிக்கப்படாமல் உள்ள மருத்துவக் கல்லூரிகள் ஏதாவது இருக்கின்றனவா என்பதுதான் கேள்வி. (குறுக்கீடு) 3 கல்லூரிகள் இருப்பதாக அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து தெரிகிறது. இந்திய மருத்துவக் குழு அதற்கு என்ன காரணம் கூறுகிற தென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, ஒவ்வொரு கல்லூரியும் முறைப்படி நடக்கிறதென்று ஏற்றுக்கொள்வதற்காக இந்திய மருத்துவக் குழு பல விதி முறைகளை அமைத்திருக்கிறார்கள். ஒரு கல்லூரி யிலே சேர்க்கப்படுகிற மாணவர்கள் 5½ ஆண்டுக்காலம் படிக்கிறார்கள். அப்படி எவ்வளவு பேர் பயில்கிறார்களோ, அனைவரும் பயிற்சி பெறுவதற்குத் தேவையான பருக்கை வசதி, லேபாரட்டரி வசதி, லைப்ரரி வசதி, அவர்களுக்கு தங்கும் இட வசதி, அவர்களுக்குத் தரப்பட வேண்டிய பயிற்சியைத்

1974 ஏப்ரல் 11]

தரத்தக்க தேர்ச்சி பெற்ற பேராசிரியர்கள் இடம் பெறுகிற வாய்ப்பு, பல்வேறு துறைகள் தனித் தனித் துறைகளாக வளர்ந்த நிலையில் அமைவது—இப்படி பல பகுதிகள் ஒவ்வொரு கல்லூரியிலும் இடம் பெற வேண்டும். புதிதாகத் துவக்கிய கல்லூரிகளுக்கு அதிக கவனத்தை அரசு செலுத்தினாலும்கூட, அது வளர்வதற்கு 10, 15 ஆண்டுக்காலம் ஆகிறது. 100 ஆண்டுக் காலமாக நடை பெறுகிற ஒரு கல்லூரி, 75 ஆண்டுக் காலமாக நடைபெறுகிற ஒரு கல்லூரி, 50 ஆண்டுக்காலமாக நடைபெறுகிற ஒரு கல்லூரி பெறுகிற அதே வசதிகளை, வாய்ப்புகளை 10 ஆண்டுக் காலத்தில், 15 ஆண்டுக் காலத்தில் எந்தக் கல்லூரியும் பெற முடிவதில்லை. அந்த வகையிலே, செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம் புத்தார் ஆகிய இடங்களில் புதிதாகத் துவக்கப்பட்ட, அண்மைக் காலத்திலே துவக்கப்பட்ட மூன்று கல்லூரிகள் வளர வேண்டிய ஒரு கட்டத்தில் இருக் கின்றன. அவைகள் வளருவதற்கான பல பகுதிகளை உருவாக்குவதற்காக ஆண்டுதோறும் ஒவ்வொரு கல்லூரிக்கும் 20 லட்சம், 25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, பல காரியங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால் ஒவ்வொரு கல்லூரிக்கும் 1 கோடி ரூபாய்க்கு மேலே வளர்ச்சிப் பணிக்குத் தேவைப் படுகிறது. இதை மற்றவர்கள் கவனிக்காவிட்டாலும் நண்பர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கவனித்திருக்கக்கூடும். இவ்வளவு பணம் தேவைப் படுகிற ஒரு கட்டத்தில், அதற்கு ஈடுகொடுத்து ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றக்கூடிய சக்தி இந்த அரசுக்கு இல்லையென்பதையும், மத்திய அரசு இப்படிப்பட்ட நல்ல முயற்சிக்கு தனி வகையில் பணம் ஒதுக்குகிற திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அங்கீகாரம் பெறுவதற்கு தொடர்ந்து முயற்சி எடுக்கப்படுகிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, may I know what are the grounds generally recognised by the Medical Council to dissociate institutions from granting recognition? Because I find that in the recent notification an institution like the Manipal Medical College which has sent out so many graduates in medicine all over the world and who are serving in the best hospitals in New York, Washington and other places has been recognised, I would like to know what are the criteria adopted by the Medical Council in these matters.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கலைவாணர்களே. இந்திய மருத்துவக் குழுவினர் எந்த அடிப்படையிலே நிராகரிக்கிறார்களென்பதை தமிழக அரசிலே, பொறுப்பிலே உள்ள நான் சொல்லுவதென்பது இயலாத காரியம். எப்படி பல்கலைக் கழகம் எந்த ஒரு கலைக் கல்லூரியாக இருந்தாலும், அது

[1974 ஏப்ரல் 11

இந்த அளவுக்குத் தரமுள்ளதாக இருந்தால்தான் ஒத்துக்கொள்வதென்ற முறை வைத்திருக்கிறதோ அப்படி இந்தியாவிலுள்ள எந்த மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும், குறிப்பிட்ட தரமுடையதாக இருக்க வேண்டுமென்ற முறையை இந்திய மருத்துவக் குழுவினர் வைத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள கல்லூரிகளுள், இந்த மூன்று கல்லூரிகளும் இன்னும் அந்தத் தரமளவுக்கு வந்து சேரவில்லையென்று சொல்லுகிறார்கள். அரசாங்கமே பல லட்சக் கணக்கான ரூபாய் செலவிட்டு, இந்தக் கல்லூரிகளை நடத்துகிறது. செங்கற்பட்டுக் கல்லூரிக்கு இதுவரை ஏறத்தாழ 1 கோடி ரூபாய்க்கு மேலே செலவாகியிருக்கிறது. திருநெல்வேலி கல்லூரிக்கு ஏறத்தாழ 90 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகியிருக்கிறது. நான் சொல்லுகின்ற கணக்கு பரிசோதனைக்குரியதல்ல. அதனால்தான் 'ஏறத்தாழ' என்று சொல்லுகிறேன். கோவைக் கல்லூரிக்கு ஏறத்தாழ 1 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகியிருக்கிறது. இன்னும் ஒவ்வொன்றுக்கும் 1 கோடி ரூபாய்க்கு மேல் தேவைப்படுகிறது. இப்படி பணம் தேவைப்படும் கட்டத்தில், அந்த வளர்ச்சிப் பணிகள் அத்தனையும் முடிவடைந்ததற்குப் பின்னர் அங்கு தேறி வருகிற மாணவர்களை நாங்கள் 'ரெகக்னைஸ்' செய்வோம்; அப்போது அந்தக் கல்லூரி 'ரெகக்னைஸ்டு' கல்லூரியாகுமென்று சொல்லுகிறார்கள். இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ நிறைவெறிவிடுமென்று எதிர்பார்த்து நாம் செயல்படுகிறோம். மற்ற இடங்களிலுள்ள கல்லூரிகள் நடத்தப்படுகிற முறைகளிலிருந்தே, அகில இந்திய மருத்துவக் குழு அவைகளுக்கு ஒப்புதல் அளிக்க முடியாத நிலை இருக்கலாம். அது பற்றிய விவரம் எனக்குத் தெரியாது.

THIRU G. VASANTHA PAI: Sir, for how many years has each of these institutions not been recognised?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இவை அண்மைக் காலத்தில் தொடங்கப்பட்டவை. பிறந்ததிலிருந்தே பெயர் வைக்கப்படவில்லை.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இப்போது கேள்வியில் எழுப்பப் பட்டு, அமைச்சரால் பதில் அளிக்கப்பட்டுள்ள மூன்று கல்லூரிகளும் அரசினால் நடத்தப்படும் கல்லூரிகளாகும். தனியார் நடத்தும் கல்லூரிகளை 'ரெகக்னைஸ்' பண்ணுமல் போய்விட்டால், அதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அரசே நடத்தும் மருத்துவக் கல்லூரிகள் 'ரெகக்னைஸ்' செய்யப்படாமல் உள்ளன. டெக்னிகலாக குறைகள் இருப்பதால்தான் 'ரெகக்னைஸ்' பண்ணவில்லையென்று எவ்வளவோ போன்றவர்கள் உணருகிறோம். அங்கு படிக்கும் மாணவர்கள் நிலைமை என்ன என்பதை அறிய விரும்புகிறேன். இம்மாதிரி 'ரெகக்னைஸ்' பண்ணவில்லையென்று சொன்னால், அங்கு படித்து பட்டம் பெற்று, வெளியேறுகிற மாணவர்களுக்கு—நமது மாநிலத்தில் மதிப்பு உண்டு—வேறு மாநிலங்களில் மதிப்பு இல்லாமல் போய்விடுமோவென்றும் அறிய விரும்பு

1974 ஏப்ரல் 11]

கிறேன். அப்படியென்றால், அது மாணவர்களைப் பாதிக்கும் நிலைமையை ஏற்படுத்துமே. எனவே இப்படிப்பட்ட ஒரு நிலைமை உண்டாகுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களிலே இவர்களுக்குப் பட்டங்கள் வழங்கப்படுகின்றன. பட்டம் வழங்குவது குறைபாடு உடையதென்று சொல்லுவதற்கு இடம் கிடையாது. அகில இந்திய மருத்துவக் குழு ஒப்புக்கொண்ட கல்லூரியில் பட்டம் பெற்றால், வெளி நாடுகளிலே சில தேர்வுகளுக்கு அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால், அதையே கூட ஏற்றுக்கொள்ளாமல், அமெரிக்காவில் உள்ளவர்கள் தனியாகத் தேர்வு நடத்துவது நமக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். ஒவ்வொரு நாட்டிலேயும், மருத்துவத் துறையிலே இன்ன ஸ்டான்டர்டு இருக்க வேண்டுமென்று வேறுபட்ட கருத்துடையவர்கள் இருக்கிறார்கள். இங்கிலாந்தில் ஒப்புக்கொள்ளப்படுகிற அதே தகுதிகள் அமெரிக்காவில் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. அமெரிக்காவில் ஒப்புக்கொள்ளப்படுகிற அதே தகுதிகள் இங்கிலாந்தில் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. வேற்றுமை இருக்கிறது. இந்தியாவில் எல்லாக் கல்லூரிகளுக்கும் ஒரு சிறப்புத் தகுதியைத் தந்து, ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கிற அந்தக் குழு, நம்முடைய கல்லூரிகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கண்ணோட்டத்தில்தான் இந்த முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். எனவே பட்டம் பெற்று வருகிற நம் மாணவர்கள் இதனால் வாய்ப்புகளை இழந்து விடுவார்களென்று கூற முடியாது. இன்னும் சொல்லப் போனால் ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்னால் இந்தக் கல்லூரி ஒப்புக் கொள்ளப்பட்டால், அன்று 'ரெகக்னைஸ்டு' கல்லூரியில் பட்டம் பெற்றவரென்ற பெயர்தான் வருமே தவிர, "before the date of recognition" என்று சொல்லி யாரும் குறைபடப் போவதில்லை. இன்றைக்குத் தேறினாலும்கூட, நாளைக்கு அந்தக் கல்லூரி ஏற்றுக்கொள்ளப்பட்டால், சரளாற்று உரிமை போல, அந்த உரிமையை மாணவர்கள் பெறுவார்கள். இதில் 'டீ-ரெகக்னைஸ்டு' என்ற கருத்துக்கே இடம் கிடையாது. ஏற்கெனவே 'ரெகக்னைஸ்' செய்த இடத்திலே, 'டீ-ரெகக்னைஸ்' செய்தால்தான், அது பெரிய குறையாக, பெரிய குற்றச்சாட்டாகத் தோன்றும். இதுவரை இந்தக் கல்லூரிகள் 'ரெகக்னைஸ்' செய்யப்படவில்லை. நாம் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறோம்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, போஸ்ட் கிராஜுவேட் கோர்சுக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக மாணவர்கள் பொறுக்கி எடுக்கப்படுகின்றனர். இந்த மூன்று கல்லூரிகளிலும் படித்து, எம்.பி.பி.எஸ்,

பட்டம் பெற்ற டாக்டர்கள் எம்.டி., எம்.எஸ்., படிப்புக்கு மனுச் செய்தால், அவர்களைக் கொஞ்சம் தரம் குறைந்தவர்களென்று ஒதுக்கிவிடுவார்களா அல்லது ஸடான்லி மருத்துவக் கல்லூரி, மதுரை மருத்துவக் கல்லூரி, எம்.எம்.சி. போன்ற மருத்துவக் கல்லூரிகளில் பட்டம் பெற்றவர்களுக்குள்ள அதே தரத்தை இவர்களுக்கும் அளிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இப்பொழுது பட்ட மேற்படிப்புத் துறைகளிலே பயிற்சி பெறுவதற்கு எல்லா மாணவர்களும் சேர வாய்ப்பு இருக்கிறது. ஆனால் பொதுவாக மாணவர்களுக்கு நேரடியாக மேற்பட்டப் படிப்புக்கு வாய்ப்புத் தருவது என்பது வர வர தடுக்கப்பட்டு வருகிறது. காரணம், அவர்கள் நேர்முகமாக மருத்துவத் துறையிலே இரண்டு மூன்று ஆண்டுக்காலம் கிராமப்புறங்களிலே எல்லாம் பணியாற்றிவிட்டு மேற் படிப்புக்கு வருவது நல்லது என்று கருதப்படுவதுதான். இங்கே ஏற்படுத்தி யிருக்கிற அத்தனை பட்டங்களும் மருத்துவக் குழு ஒப்புக்கொண்ட பட்டங்கள். அவை பல்கலைக் கழகத்தாலே அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளிலே எந்த மாணவர்களாக இருந்தாலும், இந்தப் பட்டம் பெற்றவர்கள் அவர் களுக்குத் தேவையான பிற தகுதிகள் இருக்குமானால், சேர்ந்து படிப்பதற்குத் தடையில்லை.

THIRU A. R. DAMODARAN: Sir, may I know if the boys who pass out of the Chingleput, Tirunelveli and Coimbatore Medical Colleges will be admitted to the All India Medical Institutions? If this Degree is not recognised by the Indian Medical Council, will these boys be affected when they seek employment in other States or seek admission to Institutes in other States?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, for that matter, I can say that all the students with recognised Degrees are not admitted there. Only some people are selected. The selection may be based on any such principles, which I am not aware of.

THIRU A. R. DAMODARAN: Sir, I know that only a few boys are selected. My point is whether these degrees are basically recognised by other Universities in India.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, as these Degrees are conferred by the Madras and Madurai Universities, I hope that every University has to recognise them. Only certain Councils may not recognise them, about which I am not much bothered.

THIRU G. VASANTHA PAI : Sir, the Hon. Minister may not be bothered about it, but what about the degree-holders?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, they are expected to do much service to the people. I hope that the field is always open if they have got a mind.

THIRU A. R. DAMODARAN : Sir, I am not able to understand this. If there is no statutory recognition required by the Indian Medical Council, then why should we bother about derecognition or recognition by the Indian Medical Council?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, certain policies are always adopted for certain purposes which may affect or may not affect. In general and also in practice, the recognition is very much appreciated by everyone and, therefore, we also want to get the recognition of the Medical Council. It is intended for the purpose of recognising Colleges which are for Medical Education and so we want the recognition. At the same time, the formula for recognising the Degrees for purposes of appointment and other things is already in vogue. As the Universities confer the Degrees, the State Government recognises them and many other States also recognise them.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் வேலூர் மருத்துவக் கல்லூரிதான் தனியாரால் நடத்தப்படுவது. அதற்கு இந்திய மருத்துவக் கழகம் ஏற்பு அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மிகச் சிறப்பாக நீண்டகாலம் நடைபெறுகிற அப்படிப்பட்ட எல்லா கல்லூரிகளும் மருத்துவக் குழுவாலே ஏற்றுக்கொள்ளப்பட்டுத்தான் இருக்குமே தவிர, அவைகளுக்கு ஏந்தனிதமான தடையும் இருக்காது.

Casual Labourers employed in the Coum Improvement Scheme

* 309 Q.—THIRU V. VENGA (on behalf of THIRU KATTOOR GOPAL) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any representation has been received from the Casual Labourers employed in the Coum Improvement Scheme requesting to provide employment opportunities by appointing them in Buckingham Canal Improvement Scheme; and

(*b*) if so, the action taken thereon by the Government?

கூவம் சீரமைப்புத் திட்டத்தில் பணியாற்றி வந்த தற்காலிக தினக்கூலித் தொழிலாளர்கள்

திரு. வி. வெங்கா (திரு. காட்டூர் கோபால் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கூவம் சீரமைப்புத் திட்டத்தில் பணியாற்றி வந்த தற்காலிக தினக் கூலித் தொழிலாளர்களை பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைப்புத் திட்டப் பணிகளில் அமர்த்தி வேலை வாய்ப்பு அளித்திட வேண்டிக் கொண்டு முறையீடு ஏதும் வரப்பெற்றுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : *(அ)* ஆம்.

(இ) கூவம் திட்டத்தில் பணியாற்றி வந்த தற்காலிக தினக்கூலித் தொழிலாளர்கள் எவரும் வேலை நீக்கம் செய்யப்படவில்லை என்று பாசனத் தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார்.

திரு. ஜி. பராங்குசம் : தலைவர் அவர்களே, பொதுவாகப் பொதுப்பணித் துறையிலே பணியாற்றுகின்றவர்கள் தற்காலிக தினக்கூலிகளாக இருப்பது நிர்வாகத்தில் பல சுழல்கள் நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கிறது. எனவே தற்காலிகம் என்பதை எடுத்துவிட்டு, அவர்கள் அத்தனை பேரையும் நிரந்தரக் கூலிகள் என்று ஆக்குவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பத்து நாட்களுக்கு ஆட்கள் தேவையென்றால் வைக்கின்றோம். வேலைக்குத் தேவை இல்லையென்றால் நிறுத்திவிடுகின்றோம். மறுபடியும் தேவை எற்படுகின்ற போது வைக்கின்றோம். இவர்களை தினக்கூலிகள் என்று சொல்லும்போது,

1974 செப்டம்பர் 11]

சொல்கின்ற வார்த்தை தாழ்வாக இருக்கலாம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறமாதிரி வேறு சொல்கூட வைத்துக்கொள்ளலாம். நிரந்தர ஊழியர்களாக இவர்களை ஆக்கிவிட்டால், அவர்களுக்கு வேலையில்லாத நேரத்திலும் சம்பளம் கொடுக்க வேண்டும். அவர்களை தேவைப்படுகிறபோது வைத்துக்கொள்வதால்தான், என்.எம்.ஆர். என்று சொல்கிறோம்.

திரு. ஜி. பராங்குசம்: தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையில் ஒரு வேலை முடிந்தால், மறு வேலை ஆரம்பிக்கப்படுகிறது. இப்பொழுது கூவம் வேலை முடிந்த பிறகு, பக்கிங்ஹாம் கால்வாய் வேலை ஆரம்பிக்கப்படுகிறது. அல்லது மற்ற வேலை ஆரம்பிக்கப்படுகிறது. எனவே ஒரு வேலை முடிந்தால், அவர்களை மறுவேலைக்கு மாற்றிக்கொள்ளலாம். அவர்களுக்கு நிரந்தரமாக வேலை இருந்துகொண்டுதான் இருக்கிறது. எனவேதான் தற்காலிகக் கூலிகள் என்பதை எடுத்துவிட்டு, நிரந்தரக் கூலிகள் என்று வைத்துவிட்டால், அவர்கள் எந்தவிதமான தொல்லையும் இல்லாமல், பணியாற்ற முடியும். எனவே அதற்கான திட்டம் அரசிடம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அவர்கள் முயற்சியைப் பாராட்டுகிறேன். ஆனால் அரசாங்கத்தின் நிதிநிலை இடம் தராது. ஒரு இடத்திலே வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள், இன்னொரு இடத்திலே வேலையிருந்தால், அவர்களுக்கு முதலிடம் கொடுக்கலாம்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, அவர்களை வேலை நீக்கம் செய்துவிட்டால், மீண்டும் அவர்களையே எடுத்துக்கொள்ளும் வகையில், நிரந்தர தினக்கூலி என்று அவர்களுக்குப் பெயரிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இதற்குப் பொருள் எனக்குப் புரியவில்லை. நிரந்தர தினக்கூலி என்றாலும், அவர்கள் வீட்டிற்குப் போகிறபோது வேலையில்லாமல்தான் இருக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நிரந்தர தினக்கூலி என்றால், தினம் தான் நிரந்தரமாகுமே தவிர, வேலை நிரந்தரமாகாது.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, கூவம் சீரமைப்புத் திட்டத்திலே வேலை செய்த நபர்கள் அத்தனை பேரும் இன்றைக்கு பக்கிங்ஹாம் கால்வாய்த் திட்டத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, வேலையிலே யிருந்து எவரும் நீக்கப்படவில்லை என்றுதான் சொன்னேன். எவ்வளவு பேர் என்பதற்குப் புள்ளிவிவரம் என்னிடத்திலே இல்லை.

Toilet Facilities in Madras Beach

*310 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to provide toilet facilities in Madras beach; and

(*b*) if so, the details thereof?

சென்னை கடற்கரையில் கழிப்பிட வசதிகள்

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை கடற்கரையில் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா?

(இ) ஆமெனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம், உண்டு;

(இ) கழிப்பிட வசதிகள் கட்டுவதற்கான விரிவான வரைபடம் சென்னை மாநகராட்சிப் பொறியாளரிடமிருந்து (Drainage Engineer) வரப்பெற்று, அது நிலப்பகுதி எழில்படுத்தும் குழுமிற்கு (Landscape Implementation Committee) அனுப்பப்பட்டிருக்கிறது. நிலப்பகுதி எழில்படுத்தும் குழுவினரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, I wish to tell the Hon. Minister that, right from the backwaters beside the Hotel Oceanic up to the New Observatory, the Madras Beach is a public toilet. In these circumstances, will the Government try to concentrate the toilet facilities at some place, instead of making the whole Beach a public toilet?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அதை அரசு உணர்கிறது. அதற்குத்தான் விரைவிலேயே ஒரு ஏற்பாடு செய்யலாம் என்று கருதுகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, சென்னைக் கடற்கரையிலே கழிப்பிடங்கள் எத்தனை கட்டப்படுகின்றன? அதற்கு ஆகும் செலவு என்ன? நிரந்தரமான கழிப்பிடங்களைக் கட்டி அந்த இடங்களை அங்கீகரிப்பதுவதை விட, மாலை நேரங்களில் வந்து இரவோடு இரவாக முடிந்துவிடுகின்ற சுற்றுக் கழிப்பிடங்கள் (மூவிங் டாய்லெட்ஸ்) ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா?

1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நகர்கின்ற கழிப்பிடங்கள் கட்டுவதற்கு வழி என்னவென்று தெரியாது. நமது என்ஜினியர்கள் அதை இனிமேல்தான் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether there is any proposal to introduce slot-machines for latrines as is done in foreign countries? One has to put 5 paise or 10 paise in these machines for the use of the latrines and permanent persons may be allocated to see that the latrines are kept clean. May I know whether this suggestion has been made by the Corporation of Madras?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நல்ல சிவிக் சென்ஸ் பான்சிபிலிடியை உணர்ந்திருக்கிற நாடுகளிலே அந்த நிலைமை இருக்கக்கூடும். இங்கே நாம் வேண்டுமென்று பணம்கொடுத்தாலும் அப்படிச் செய்வார்களா என்பது ஆச்சர்யமாக இருக்கிறது. அப்படிச் செய்யமாட்டார்கள்.

Government Mechanised Brick Plant, Thirumazhisai

* 311 Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Industries be pleased to place on the table of the House, a copy of the Balance Sheet of tha Government Mechanised Brick Plant for the last three years?

அரசு இயந்திர செங்கல் தொழிற்சாலை, திருமழிசை.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கேட்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

அரசு இயந்திர செங்கல் தொழிற்சாலையின் கடந்த மூன்றுண்டுகளுக்கான ஐந்தொகைக் குறிப்புகளின் படி ஒன்று மேலவை முன் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசு இயந்திர செங்கல் தொழிற்சாலையின் ஐந்தொகைக் குறிப்புகள் மார்ச், 1972 ஆண்டு வரை தயாரிக்கப்பட்டு, மாதிரி கணக்கு ஆய்வுத் தலைவரின் பரிசீலனையில் உள்ளது.

THIRU G. VASANTHA PAI : Sir, may I ask the Hon. the Minister for Industries how a very efficient plant manufacturing mechanised bricks, like the plant at Thirumazhisai is deprived of persons who are expert business canvassers and who could

really bring in a lot of money to this mechanised plant? I have always found that this plant does not carry the bricks to the house of the person who asks for them. If a person wants to get bricks from this plant, he has to go and request them and send them a lorry and then only, they will transport the bricks. May I ask the Hon. Minister how the brick plant can thrive if this is the condition and how it can reach the capacity of 60,000 while it is now manufacturing only 35,000?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I am sorry I am not able to take the compliments of the hon. Member, for this factory runs at a loss of Rs. 35 lakhs because it is not able to manufacture even 50 per cent of the targeted production capacity of 66,000.

THIRU G. VASANTHA PAI : Sir, may I tell the Hon. Minister that the fact is that bricks are not moving from there, not because there is no demand but because there are no transport facilities? I asked for several consignments of bricks from that factory, but they always asked me to send the lorry.

MR. CHAIRMAN : There are so many lorries available for hire.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, as regards the order for supply of bricks placed by the hon. Member, we will try to supply him the bricks.

* 312 *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government Mechanised Brick Plant at Thirumazhisai is operating at a loss now; and

(*b*) if so, the details thereof?

1974 ஏப்ரல் 11]

அரசு இயந்திர செங்கல் தொழிற்சாலை, திருமழிசை

திரு. எஸ். வெள்ளபாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திருமழிசையிலுள்ள அரசு செங்கல் சூளை தற்போது செயல்பாட்டில் இயங்கி வருகிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) 1967-68-ம் ஆண்டு முதல் 1971-72ம் ஆண்டு வரை மொத்த இழப்பு ரூ. 37,71,604-43.

(பிற்பகல் 4-40)

THIRU A. R. DAMODARAN: Sir, is the loss due to the fact that the factory is working at less than 50 per cent of its installed capacity and if so, what are the real difficulties? Is it due to the sale prices being low or lack of transport facilities? May I know what exactly is the trouble in these factories?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, 66 ஆயிரம் செங்கற்கள் செய்ய வேண்டும் என்பது ஒப்பந்தம். அப்போது யூகோஸ்லாவியா நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட அவர்களுடைய இயந்திரத் திறனுடைய அடிப்படையிலே அவர்களோடு செய்துகொண்ட ஒப்பந்தம் 66 ஆயிரம் செங்கற்களுக்குத்தான். ஆனால் இதுவரையில் எப்போதுமே 34 ஆயிரம் 40 ஆயிரத்திற்கு மேலே போக முடியவில்லை. இதற்கான காரணங்கள் ஆராயப்பட்டன. சொல்லப்படும் எந்தக் காரணமும் எனக்குச் சரியாகப்படவில்லை. ஆகவே 66 ஆயிரம் செங்கல் உற்பத்தி செய்தால்தான், லாபம் கிடைக்கும் என்று நம்பி, அந்த இயந்திரத்தை வாங்கியதுதான் தவறு என்று நான் கருதுகிறேன். இந்த நிலையை மாற்றுவதற்கு என்ன பரிகாரம் என்று ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். இதுபோல இன்னும் மெகனைஸ்டு ப்ளாண்ட்ஸ் இருக்கின்றன. அவற்றுக்கும் அரசாங்கம் உதவி கொடுத்திருக்கின்றது. அவற்றிலும் நஷ்டம்தான். தனியார் செங்கற்சூளைகளில் நிலை என்ன என்று ஆராய்ந்து பார்க்கும்படி, அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டேன். அங்கும் இப்படித்தான் நஷ்டம் வருகின்றது என்று அவர்கள் சொல்லுகின்றார்கள். 1965லே யூகோஸ்லாவியா நாட்டோடு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றார்கள். அந்த அதிகாரிகளோடு நானே பேசிப் பார்த்தேன். அவர்களும் சரியான முகாந்திரம் கொடுத்ததாகத் தெரியவில்லை. இதற்கு இடையிலே

செக்கோஸ்லாவாகியாவோடு—எங்கள் காலத்திலே இல்லை, எங்களுக்கு முன்பே ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களுடையதோடு, நஷ்டம் அடையும் ப்ரிக் ப்ளாண்ட்டோடு, சேர்த்துப் போட்டாலாவது நஷ்டம் வராமலிருக்குமா என்று பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. ஜி. பராங்குசம் : தலைவரவர்களே, இந்த இயந்திரங்கள் எத்த ஆண்டில் வாங்கப்பட்டன? எந்த அதிகாரியால் பரிசீலிக்கப்பட்டு வாங்கப் பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அதிகாரிகளுடைய பெயர்கள் நினைவில்லை. 1963 ஆம் ஆண்டிலே அது அனுமதிக்கப்பட்டிருக் கின்றது என்று மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Government consider putting persons with industrial experience in charge of the plant, instead of putting I.A.S. Officers, and try to increase the sale of bricks?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தொழிற்சாலைக்கு இல்லாவிட்டாலும், அந்த இலாகாவிற்கு அப்போது ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி பொறுப்பேற்றிருந்தார். இப்போது அதை ஒரு தனி வாரியமாக அமைத்து, அதிலே ஒரு திறமை வாய்ந்த எஞ்சினீர் அதிகாரி, ஜாயின்ட் டைரெக்டராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். இருந்தாலும் The basic fact remains the same.

THIRU A. R. DAMODARAN : Sir, what is the boiler fuel that is used—is it firewood, coal or furnace oil? Is there any proposal to hand over this unit to the Housing Board which may be able to utilise it to a better extent?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இதை ஹௌஸிங் போர்டுக்கு ஒப்படைக்கலாமா என்று கேட்கின்றார்கள். நான் ஹௌஸிங் அமைச்சராக இருந்தபோது இதைப்போலுள்ள ஒரு தொழிற்சாலையை தொழில் இலாகாவிற்கு ஒதுக்கிவிடலாம் என்று முடிவெடுத்து, அப்போது தொழில் இலாகாவிற்கு அதைத் தள்ளிவிட்டோம். இப்போது நான் தொழில் இலாகாவிற்கு வந்திருக்கிறேன். இந்த இரண்டையும் சேர்த்து ஒரே இடத்தில் போட்டால் ஓவர்ஹெட் சார்ஜ் குறையும், இந்த நஷ்டத்தையும் குறைக்கலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இதைப் பரிசீலித்துக்கொண்டிருக் கிறோம்.

1974 ஏப்ரல் 11]

THIRU G. VASANTHA PAI : Sir, the Housing Board accounts, I am told, are not made up after 1965. At least these accounts have gone up to 1972. Will the Government see that they also come to the same level and then put them together?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அங்குத்தினர் நினைப் பதைப்போல ஹௌசிங் போர்டு மீது குறை சொல்ல முடியாது. அது **திறமையாக மக்களுக்குப் பணியாற்றி வருகின்றது. இதை அவர்கள் எடுத்துக் கொண்டுள்ள** காரணம் அவர்களுக்குத் தேவையான செங்கற்களே அவர்களே செய்து பயன்படுத்திக்கொண்டால் இப்படிப்பட்ட நஷ்டம் இல்லாது இருக்குமோ என்று முடிவெடுத்தது. ஆனல் அதில் ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாக அவர்களுக்கே பயம் ஏற்பட்டுவிட்டது. பிறகு தொழில் இலாகா **நடத்தும் செங்கற் சூளையோடு சேர்த்துவிட வேண்டும் என்று முடிவெடுத்** தார்கள். இப்போது நாம் உற்பத்தி செய்யும் செங்கல் அவ்வளவையும் அரசாங்கமே வாங்கிக்கொண்டால் பெரும் நஷ்டம் இல்லாத நிலை ஏற்படலாம், விலையைக் குறைத்துச் சொல்ல வேண்டிய நிலையும் இல்லாது இருக்கும் என்று இதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவரவர்களே, தனியார் துறையிலுள்ள மற்ற இரண்டு தொழிற்சாலைகளிலே இருக்கும் இயந்திரங்கள் யூகோஸ்லாவிய விலிருந்து வந்தவைதானே? யூகோ இயந்திரங்கள் தவிர வேறு நாட்டு இயந்திரங்கள் ஏதாவது நமது மாநிலத்தில் இயங்கி வருகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, வெளிநாட்டு இயந்திரங்கள் எல்லாமே இப்படித்தான் இருக்கின்றன. எந்த நாட்டு இயந்திரம் என்பது முக்கியமில்லை.

Service Clubs

* 313 *Q.*—THIRU S. NARAYANASWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether members of the Judiciary both on the State and District levels can be members of Service Clubs; and

(*b*) if so, whether they can contest for posts in those organisations and canvass for votes?

பணிச் சங்கங்கள்

திரு. எஸ். நாராயணசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் உள்ள நீதிபதிகள் பணிச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கலாமா ?

(இ) ஆம் எனில், அந்த அமைப்புகளில் உள்ள பதவிகளுக்கு அவர்கள் போட்டியிட்டு வாக்குகள் சேகரிக்கலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *(அ)* & *(இ)* ஆம். பணிச்சங்கங்களின் நோக்கங்கள் அல்லது நடவடிக்கைகள் இந்திய நாட்டு ஒருமைப்பாட்டிற்கோ இறைமைக்கோ அல்லது பொது அமைதிக்கோ அல்லது ஒழுக்கத்திற்கோ பாதகமாக இல்லாவிட்டால் அவர்கள் அப்பணிச் சங்கங்களின் உறுப்பினர்களாக இருக்கலாம்.

THIRU A. R. DAMODARAN : Sir, do the Government propose to frame any rules regarding the members of the Judiciary contesting for seats in social clubs, because these occurrences have happened and they may reflect on the prestige of the Judiciary? Do the Government consider it desirable that members of the Judiciary should be allowed to contest for positions in these institutions?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, we have consulted the High Court. The High Court has stated that according to rule 21 (b) of the Government Servants Conduct Rules, 1960, no Government servant shall join or continue to be a member of an association, the objects or activities of which are prejudicial to the interest of the sovereignty and integrity of India, public order or morality.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இது முக்கியமான விஷயம் என்று நினைக்கிறேன். காரணம் உயர்நீதி மன்றத்திலுள்ள நீதிபதிகள் சிலர் 'கிளப்' களில் நிர்வாகப் பதவிக்குப் போட்டியிட்டு பிறகு அவர்கள் தோல்வியடைவது அவ்வளவு நல்லதல்ல. அண்மையில்கூட சில தினங்களுக்கு முன்பு அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது. ஆகவே அரசாங்கத்திலிருந்து அவர்களுக்கு ஒரு

1974 ஏப்ரல் 11]

வேண்டுகோள் என்ற முறையில், இப்படிப்பட்ட 'ஸ்ட்'கவில் அவர்களில் நிர்வாக பதவிகளுக்குப் போட்டியிடுவது நல்லதில்லை என்று தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: *தலைவரவர்களே, அந்த நிர்வாகப் பதவிகளுக்கு மட்டுமில்லை, அதையொட்டி பல்வேறு விஷயங்களையும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கருத்தில் கொண்டுதான் இதைச் சொல்லுகின்றார் என்று நினைக்கிறேன்.* **அவர்களுடைய உணர்வினை இந்த அரசு மதிக்கின்றது. அந்த உணர்வினை அப்படியே உயர் நீதி மன்றத்திற்கு அரசாங்கம் அனுப்பி வைக்கும்.**

Bills which are pending assent of the President of India.

*314 Q.—THIRU S. NARAYANASWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the names of Bills as passed by the Tamil Nadu Legislature which are pending with the President of India for signature over six months;

(b) the period for which each such Bill is pending;

(c) the reason for non-signature; and

(d) the action proposed to be taken by the Government in the matter?

இந்தியக் குடியரசுத் தலைவரிடம் ஒப்புதலுக்காக உள்ள சட்ட வரைவுகள்

திரு. எஸ். நாராயணசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): *மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

(அ) தமிழ்நாடு சட்ட மன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்காகக் குடியரசுத் தலைவரிடம் ஆறு மாதங்களுக்கு மேலாக இருக்கும் சட்ட வரைவுகள் யாவை?

(இ) அத்தகைய ஒவ்வொரு சட்ட வரைவும் ஒப்புதல் பெற வேண்டியிருக்கும் கால அளவு என்ன?

(உ) ஒப்புதல் அளிக்கப்படாததற்குக் காரணம் என்ன?

(எ) இது குறித்து அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) (1) தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு, நியாய வாசம் கொடுத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட வரைவு (சட்ட மன்றப் பேரவை சட்ட வரைவு எண் 26/1972) 1972 அக்டோபர் 25 ஆம் நாள் முதற் கொண்டு இசைவுக்காக காத்திருக்கிறது.

(2) தமிழ்நாடு 1973 பயிரிடு குத்தகைக்காரர்கள் நிலக்கிழார் உரிமையை வாங்குவதற்கான உரிமை சட்ட வரைவு (சட்டமன்றப் பேரவை சட்ட வரைவு 11/1973) 1973 ஜூன் 2 ஆம் நாள் முதற்கொண்டு இசைவுக்காக காத்திருக்கிறது.

(உ) இந்திய அரசு இச்சட்ட வரைவுகள் குறித்து சில வினுக்களை எழுப்பியுள்ளது. இந்த வினுக்கள் குறித்து தங்களது குறிப்புரைகளை அனுப்பு மாறு இந்திய அரசு இம்மாதில அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. இந்திய அரசு எழுப்பியுள்ள வினுக்களுக்குரிய விடை அவர்களுக்கு முன்னரே அனுப் பப்பட்டு விட்டது.

(எ) இந்திய அரசுக்கு நினைவூட்டுக் கடிதங்கள் குறித்த காலத்திற்கு ஒரு முறை அனுப்பப்பட்டு வருகின்றன.

(பிற்பகல் 4-50.)

THIRU G. VASANTHA PAI: Sir, of late there have been several instances where, when the assent of the President has been received, they have been qualified by an accompanying letter, which has not been circulated either among the Members of this House or among the public. When I talked about this in the last March session, on the Statement of Supplementary Expenditure, the Hon. the Chief Minister said that he would consider the question of placing those letters before the House. May I know whether the Hon. the Minister for Industries and Law will kindly consider placing those letters which accompany the assent of the President when giving assent to the Bills, before the House along with the list of Bills to which assent has been received?

THE HON. THIRU S. MADHAVAN: Sir, there is no harm in placing that correspondence before the House. But, the difficulty is this. We have to answer some queries and if we answer them and if they accept the answers, immediately the assent is given. So, it is not necessary to place always the correspondence on the table of the House. When particular questions arise in respect of any particular assent, we will furnish it.

1974 ஏப்ரல் 11]

THIRU G. VASANTHA PAI : Sir, there are two or three Writ Petitions in the High Court wherein this question has been raised. The assent of the President for those Bills, which have become Acts, has been given in a qualified manner. Those Bills with the qualified assent have not been circulated among the Member of the House.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, the President can only suggest or the Government of India can only suggest that before implementing a particular Act, we may take some steps or may incorporate certain suggestions, if we desire. So, there cannot be any qualified assent. They only advise us that certain provisions may be incorporated before a particular Bill becomes an Act. That is all that they can do. We will implement it or if we so desire, we will not implement it. There cannot be a qualified assent. They only give suggestions along with the assent.

THIRU G. VASANTHA PAI : Sir, are the Government aware that a contention has been raised that the President, while giving assent, acts in a quasi-legislative capacity and that, therefore, an assent together with the Bill only can be read together and not separately?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I do not agree with the hon. Member on this interpretation or argument because we always interpret the law thus—that whatever law is passed by this Legislature, if the President gives assent, it becomes an Act. So, if any subsequent advice or suggestions are given by the Government of India, we may consider or we may not consider them.

THIRU G. VASANTHA PAI : Sir, what I referred to is the letter sent with the giving of the assent.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, according to the Constitutional provisions, there cannot be any qualified assent or consent by the President.

THIRU A. R. DAMODARAN : Sir, since the Legislature is passing these Bills, would it not be fair to the Legislature to pass on whatever comments the President has to make, so that the Legislatures may also know, for future guidance, whether the action they have taken is in the correct direction or not?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, that is why I mentioned that the correspondence ended with acceptance or assent. We leave it at that. Supposing they press us with any then we bring the Bill here and amend it in accordance with the suggestion, then we bring the Bill here and amend it in accordance with the suggestions.

THIRU A. R. DAMODARAN : Sir, supposing it is rejected, will it be placed before the Legislature?

THE HON. THIRU S. MADHAVAN : Certainly, Sir.

Additional Public Prosecutor

*315 Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the post of Additional Public Prosecutor in the Additional Sessions Court at Tiruchirappalli is lying vacant from June 1973; and

(*b*) if so, the reasons therefor?

கூடுதல் வழக்கு நடத்துநர் பதவி

*திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

*(அ) திருச்சிராப்பள்ளியில் உள்ள கூடுதல் செஷன்ஸ் நீதி மன்றத்தில் கூடுதல் வழக்கு நடத்துநர் (Additional Public Prosecutor) பதவி 1973 ஜூன் திங்களிலிருந்து காலியாக உள்ளதென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, 1973-ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை திருச்சிராப்பள்ளி அடிஷனல் செஷன்ஸ் கோர்ட்டில் பப்ளிக் பிராசிக்கூட்டர் பதவியில் இருந்த ஒருவர் அந்தப் பதவியிலிருந்து விலகியதன் காரணமாக, அது காலியாகவே இருந்து வருகிறது. ஆறு மாதங்களுக்கு மேலாகியும் அது பூர்த்தி செய்யப்படாமலேயே இருந்து வருகிறது. இனியாவது பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: *தலைவரவர்களே, அடிஷனல் பப்ளிக் பிராசிகூட்டர் என்று ஒருவர் இல்லையே தவிர அந்த வேலை நடைபெறுமலில்லை. காரணம், பப்ளிக் பிராசிகூட்டர் அந்த வேலையைச் சேர்த்துப் பார்க்க வேண்டுமென்று ஒரு நிரந்தர உத்தரவு இருக்கிறது. 18—2—1974-ல் ஒரு புதிய நபர் அந்தப் பதவியில் சேர்ந்திருக்கிறார்.*

Collapse of Harijan Colony as a result of Heavy Rain

* 316 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that about 20 houses collapsed in the Harijan Colony at Tirupathi Saram, Thovalai taluk, Kanyakumari district, on account of staguation of rain water as a result of the heavy rains during 1970;

(*b*) whether any representation has been received, requesting assistance for the reconstruction of those houses; and

(*c*) if so, the action taken thereon?

பெரு மழையினல் பாதிக்கப்பட்ட அரிசனக் குடியிருப்பு

திரு. எம். சங்கரலிங்கம்: *மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலுகா, திருப்பதி சாரத்தில் உள்ள அரிசனக் குடியிருப்பில் 1970-ம் ஆண்டு பெய்த பெருமழையினல், தண்ணீர் பெருக்கெடுத்து தேங்கி நின்றதால் சுமார் 20 வீடுகள் வீழ்ந்தன என்பது உண்மையா?

(இ) அந்த வீடுகளை திருப்பிக் கட்டுவதற்கு உதவி கேட்டு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: *(அ) 27 வீடுகள் பாதிக்கப்பட்டன.*

(இ) ஆம்.

(உ) பாதிக்கப்பட்ட 27 நபருக்கும் தலா ரூபாய் 30 உதவித் தொகையும், ரூபாய் 10 துணிகள் வாங்குவதற்கும் மொத்தத்தில் ரூபாய் 1,080 நிவாரணம் வழங்கப்பட்டது. வீடுகளைத் திருப்பிக் கட்டுவதற்கு கடன் வழங்கும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, 1970 ஆம் ஆண்டில் பெய்த பெருமழையின் காரணமாக வீழ்ந்த வீடுகள் 27-ல், 20 அரசாங்கத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட ஹரிஜன காலனி வீடுகளாகும். அந்த 20 வீடுகளும் மழையில் இடிந்து வீழ்ந்து விட்டன. கூரை சாமான்கள், கம்புகள், கதவுகள், ஆகிய வற்றையெல்லாம் அந்த மக்கள் எடுத்து வைத்திருந்தார்கள் திரும்பக் கட்டிக் கொள்வதற்கு ரூபாய் 1,000 கடனுக்கு கேட்டார்கள். அவைகள் அரசாங்கக் கட்டிடங்களானதால், அவற்றை தனியார் ஒன்றும் செய்யக்கூடாது, அதற்காக கடனும் கொடுக்க வாய்ப்பு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அந்த ஏழை களின் வீடுகளை உடனடியாகச் சீர் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, ரூபாய் 1,000 மான்யமாகக் கேட்டார்கள். ஹரிஜன இலாகா அரசாங்க வீடுகளுக்குத் திரும்பக் கட்டித் கொள்வதற்கு மான்யமும் கொடுக்க முடியாது என்று தெரி வித்துள்ளது. தக்காவிக் கடனுக்கு கொடுப்பதற்கு அந்த இலாகா நடவடிக்கை கள் எடுத்து அரசுக்குக் குறிப்பு அனுப்பியிருக்கிறது. விரைவில் பரிசீலித்து, முடிவு எடுக்கப்படும்.

Artificial Insemination Centre of the Veterinary Department.

*317 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that an Artificial Insemination Centre of the Veterinary Department is situated at the entrance of Shri Brahadeeswara Temple, Thanjavur; and

(*b*) if so, whether there is any move to shift it to any other suitable place?

கால்நடை மருத்துவத்துறையைச் சேர்ந்த செயற்கை முறை கருத்தரிப்பு நிலையம்

திரு. எல். பலராமன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதி லளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர், அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலயத்தின் நுழைவாயிலில், கால்நடை மருத்துவத் துறையைச் சேர்ந்த செயற்கை முறை கருத்தரிப்பு நிலையம் ஒன்று அமைந்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அதனை வேறோர் தகுந்த இடத்திற்கு மாற்ற செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: *(அ) கால்நடை மருத்துவ மனையுடன் இணைந்த கேந்திர கிராம நிலையம் ஒன்று செயற்கை கருத்தரிப்பு வசதிகளுடன் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது.*

(இ) இது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கே. எஸ் கணபதி: *தலைவரவர்களே, திருக்கோவில் என்பது ஒரு பொதுவான இடம். அங்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள், அனைவரும் வருகிறார்கள். அப்படி வந்து செல்கின்றவர்களுக்கு இது இடையூறாக இருப்பதால், உடனடியாக இதை அகற்றுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: *தலைவரவர்களே, நான் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். அறநிலையத் துறையின் கருத்தை அறிந்து தான் செய்ய வேண்டும்.*

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: *தலைவரவர்களே, இதிலே கருத்து வேற்றுமைக்கே இடமில்லை. உடனடியாக நீக்கினால் நலமாகவிருக்கும் என்று கருதுகிறேன்.*

Cases Booked by the Vigilance and Anti-Corruption Directorate

* 318 *Q.*—THIRU M. ARUMUGASWAMI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any cases have been booked by the Vigilance and Anti-corruption Directorate, within the last six months against any Officers of the Civil Supplies Department; and

(*b*) if so, the details thereof?

ஒழுக்கக் கண்காணிப்பு, லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகத்தாரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): *மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

(அ) உணவு வழங்கல் துறையின் அதிகாரிகள் எவர் மீதேனும் கடந்த ஆறு திங்களில் ஒழுக்கக் கண்காணிப்பு லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகத்தாரால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) கடந்த ஆறு மாதங்களில், உணவுப் பொருள் வழங்கல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மீது ஒழுக்கக் கண்காணிப்பு லஞ்ச ஒழிப்பு இயக்குநரால் மேற்கொள்ளப்பட்ட வழக்குகளின் விவரம் :—

	அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள். (1)	அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள். (2)
விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை.	1	9
தொடக்க விசாரணையின் பின்னர் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	—	—
விரிவான விசாரணையின் பின்னர் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	—	2
புலனாய்வு நடந்து வரும் வழக்குகளின் எண்ணிக்கை.	1	7

Kerosene

* 319 *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) the quantity of Kerosene allotted by the Government of India for distribution by the Oil Companies during each of the months from October, 1973 to February 1974; and

(*b*) whether any communication has been received from the Government of India regarding its availability in each of the coming months from March to June 1974?

மண்ணெண்ணெய்

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எண்ணெய் நிறுவனங்கள் மண்ணெண்ணெய் வழங்குவதற்காக 1973 அக்டோபர் முதல் 1974 பிப்ரவரி வரை ஒவ்வொரு மாதமும் இந்திய அரசு ஒதுக்கிய மண்ணெண்ணெய் அளவு யாது ?

(இ) அடுத்த வரும் 1974 மார்ச் முதல் ஜூன் வரை ஒவ்வொரு மாதத்திலும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு பற்றி தகவல் ஏதும் இந்திய அரசிடமிருந்து வந்துள்ளதா ?

1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ)

அக்டோபர் 1973—30,959 மெட்ரிக் டன்கள்.

நவம்பர் 1973—27,716 மெட்ரிக் டன்கள்.

டிசம்பர் 1973—24,995 மெட்ரிக் டன்கள்.

ஜனவரி 1974—26,611 மெட்ரிக் டன்கள்.

பிப்ரவரி 1974—21,801 மெட்ரிக் டன்கள்.

(இ) மார்ச்சு திங்களுக்காக மத்திய அரசு தமிழ் நாட்டுக்கு 22,011 டன் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்துள்ளது. ஏப்ரல், மே, சூன் திங்களுக்கான ஒதுக்கீடு குறித்துத் தகவல் எதுவும் மத்திய அரசிடமிருந்து வரவில்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, these quotas are being reduced month by month—from 30,900 Metric Tonnes to 21,900 Metric Tonnes. In view of the non-availability of kerosene, may I know whether the Government of Tamil Nadu will make a representation to the Government of India in this regard, especially in view of the fact that we will have a power-cut in April-June and there are many kerosene pumpsets, agricultural pumpsets, which would require kerosene?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதற்கான முயற்சியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் 20,000 கிலோ லிட்டர் என்று இருந்தது 21,000 கிலோ லிட்டர் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் உயர்த்த வேண்டுமென்று கேட்பதில் இந்த அரசு தயக்கம் காட்டுவதாகக் கருத வேண்டாம். நாம் கேட்கலாம். அவர்கள் கொடுப்பார்களா, இல்லையா என்பது வேறு விஷயம். மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக பம்ப்செட்டுகளுக்கு மண்ணெண்ணெய் உபயோகித்தால், அந்த மோட்டார்கள் ஒழுங்காக இருக்குமா, சிக்கிரமாகப் பழுதாகிவிடாதா என்பதையெல்லாம் அவ்வாறு உபயோகிப்பவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : தலைவரவர்களே, மின்சார பம்ப்செட் என்று சொல்லவில்லை. கெரொசின் பம்ப்செட்டுகள் உபயோகிக்கின்றார்களே, அவைகளுக்குக் கொடுக்கப்படுமா என்பது தான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, பெட்ரோல் அல்லது டீசல் எண்ணெயில்தான் பம்ப்செட்டுகள் ஓடும். அம்மாதிரியான பம்ப்செட்டுகளில் மண்ணெண்ணெயை உபயோகித்தால், இன்ஜின்கள் கெட்டு

விடும். பெட்ரோல், டீசல் எண்ணெய் இவற்றில் ஓடி வந்தவைகளில் மண்ணெண்ணெயைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னார்கள். மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு இல்லாமல் இருந்ததோடு, விலையும் குறைவாக இருந்து வந்த காரணத்தால், அப்படிச் செய்து வந்தார்கள். டீசல் எண்ணெய் விலை அதிகமாக இருந்த காரணத்தினால், மண்ணெண்ணெயை வாங்கி லாரி பஸ்கள் இவற்றிலெல்லாம் பயன்படுத்தினார்கள். இப்பொழுது இரண்டுக்கும் விலையில் உள்ள வித்தியாசம் பைசா அளவிலேதான் இருப்பதால், மண்ணெண்ணெயை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. விவசாயிகள் மண்ணெண்ணெயைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்களா என்பதும் மண்ணெண்ணெயை மட்டும் பயன்படுத்துகின்ற மோட்டார்கள் இருப்பதாகவும் தெரியவில்லை. அதுபற்றி விசாரித்துப் பார்க்க வேண்டும்.

THIRU A. R. DAMODARAN: Sir, since the Hon. Minister may have a wrong impression, I may state that there is a particular brand of kerosene engine called "A. V. Petter Engines", which run on kerosene oil. While I agree that some portion of kerosene was being used for running motor engines, I would like the Hon. Minister to kindly realise that agriculturists require kerosene in certain areas for kerosene pumpsets of 3 h.p. and 2 h.p. which have been manufactured by various companies. Therefore, since he may have a wrong impression that kerosene is wrongly used, I wish to correct the impression and tell him that such an engine exists and kerosene would be required for that purpose.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, மண்ணெண்ணெயைப் பயன்படுத்துகின்ற இன்ஜின்களும் இருக்கின்றன என்று சொல்கிறார். எப்பொழுதுமே தேவையான அளவுக்கு மண்ணெய் கொடுக்கப்பட வேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு இந்த அரசு எழுதுவதற்குத் தயக்கம் காட்டாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5.00.)

THIRU G. VASANTHA PAI: Sir, do the Government receive supplies of kerosene in advance by three or four months or do they receive supply for a month only during that month?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, மாதா மாதம் போட்டுத் தான் அனுப்புகிறார்கள். ஒரு மாதம் முன்னதாக இண்டெண்டு வரும். அதற்குப் பிறகு இவ்வளவு கொடுப்பதாக அறிவிப்பார்கள்.

1974 ஏப்ரல் 11]

அதன் பிறகு நாங்கள் மனலி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்தும், கொச்சி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்தும் வாங்கிக்கொண்டிருக்கிறோம்.

THIRU G. VASANTHA PAI: Sir, the question refers to the quantity received from the Government of India and its availability in each of the coming months from March to June.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அதைத் தான் ஏற்கெனவே படித்தேன்.

Recommendations made at the conference of Transport Ministers of Southern States

* 320 Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the recommendations made at the Conference of Transport Ministers of Southern States held in December 1972 at Coimbatore?

தென் மாநில போக்கு வரத்துத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட பரிவுரைகள்

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கோயம்புத்தூரில் 1972 டிசம்பரில் நடைபெற்ற தென் மாநில போக்கு வரத்துத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு அமைச்சர்கள் செய்த பரிவுரை குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மேலவை முன் விவர அறிக்கை யொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இந்தப் பரிவுரைகளை நமது சர்க்கார் முழுவதும் ஏற்றுக்கொண்டதா? அப்படி ஏற்றுக்கொண்டிருந்தால், அந்தப் பரிவுரைகள் மேல் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி விவரங்கள் கூற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தப் பரிந்துரைகள் நான்கு மாநிலங்களின் அரசாங்கங்களும் ஏற்றுக்கொண்ட பரிந்துரைகள் ஆகும். அவைகளுடைய நடைமுறைகளைக் கண்காணிக்க வேண்டும் என்று தென்னகத்தைச் சேர்ந்த நான்கு மாநிலங்களும் சேர்ந்து ஒரு போக்குவரத்துக் குழு அமைத்து அவர்கள் கண்காணித்து வருகிறார்கள். நாளாவட்டத்தில் அவைகள் நிறைவேறும்.

@ 117–122 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கு அவரது 69-வது பிறந்த நாளையொட்டி வாழ்த்துக்கள்.

* திரு. கே. ராஜாராம் : *மாண்புமிகு தலைவரவர்களே, இன்று ஒரு மகிழ்ச்சியான தினம். தங்களுக்கு 69-வது பிறந்த தினம்.*

THIRU G. VASANTHA PAI : Sir, on a point of order. Yesterday I wanted your leave to move a non-official resolution to felicitate you on your birthday today. No reply was given to me. Now the hon. the Leader of the Opposition is moving and I have no objection. I request the Leader of the Opposition to move the same on behalf of all of us.

THIRU K. RAJARAM : Not only on my behalf but on behalf of my hon. Friend Thiru Vasantha Pai also, I am felicitating the Hon. Chairman.

THIRU G. VASANTHA PAI : The hon. the Leader of the Opposition may move it on behalf of the House.

THIRU K. RAJARAM : For this I have already got the consent of my hon. Friend Thiru Vasantha Pai also in the Chamber of the Hon. Chairman.

ஆகவே தங்களுடைய பிறந்த தினத்தை முன்னிட்டு தங்களுக்கு எங்களுடைய வணக்கத்தையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்வதில் இந்தச் சபையில் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவு போட்டி போட்டுக்கொண்டிருந்தும் என்பதை நீங்களே நேரில் அறிந்து கொண்டீர்கள். நாங்கள் உங்களை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறோம். நீங்கள் எங்கள் எல்லோரையும் விட மூத்தவர் என்பதால் தான் வாழ்த்துகிறோம் என்ற வார்த்தையைச் சொல்லவில்லை ; எங்களுடைய வணக்கத்தையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். தங்களைப் போன்ற ஒருவர் தலைவராக இருந்து அவையை நடத்துவது என்பது எங்களுக்கு மிகச் சந்தோஷத்தையும் பெருமையையும் கொடுக்கிறது. ஏனென்றால் இந்தியாவில் பல சபைகளில் நடப்பதைப்

1974 ஏப்ரல் 11] [திரு. கே. ராஜாராம்]

பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்தச் சட்டசபையிலே எத்தனை மணி நேரம் உட்கார்ந்திருந்தாலும், எங்களுக்குச் சலிப்புத் தட்டுவதில்லை. நீங்கள் இந்த அவையை நடத்தும் விதம் எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. நீங்கள் குறுக்கிட்டு எங்களைச் சிரிக்க வைத்து எங்களுக்கு இந்தச் சபையில் ஏற்படக் கூடிய ஸ்ட்ரெயின் தெரியாமல், எல்லோரையும் மகிழ்ச்சியான முறையிலும், பாரபட்சம் இல்லாமலும், எல்லாக் கட்சிகளையும் ஒரே மாதிரியாகவும் நடத்தி வருவது எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இந்தப் பாரம்பரியம் நீண்டு நடைபெற வேண்டுமென்று விரும்புகிறேன். தாங்கள் நீடித்த ஆயுளையும் குறைவற்ற செல்வத்தையும் பெற்று பல்லாண்டுகள் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : செல்வம் இல்லை.

திரு. கே. ராஜாராம் : அதையும் பெற வேண்டும். பெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென்று கூறி, எல்லா உறுப்பினர்கள் சார்பிலும் பாராட்டுதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மேலவைத் தலைவரவர்களே, இன்று தங்களுடைய 69 ஆவது பிறந்த நாள் விழாக் கொண்டாடப்படும் சூழ் நிலையில் மேலவை தன்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்ற நிலைமை ஏபட்டிருப்பது நமக்கெல்லாம் பெருமை தருகின்ற ஒன்று. அதைத் தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்த ஆண்டும் இந்த வாய்ப்பு ஏற்பட்டதில்லை. ஏனென்றால் எந்த ஆண்டும் ஏப்ரல் 2, 3 தேதியோடு இரண்டு அவைகளும் முடிந்துவிடும். இந்த ஆண்டு தான் ஏப்ரல் 11 ஆம் தேதி வரை நீட்டிக்கொண்டு வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டதால், தங்கள் பிறந்த நாள் விழாவன்று மேலவை நடைபெறவும், தாங்கள் வீற்றிருப்பதுமான சூழ் நிலை ஏற்பட்டது. இந்த ஆண்டுதான் இந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் இந்த வாய்ப்புக் கிடைக்க வில்லை.

நீண்ட நெடுங்காலமாகவே தாங்கள் பொதுத் தொண்டிற்குத் தங்களை ஒப்படைத்து, பொதுப்பணி புரிந்து வருவதில் நிகர் கவனம் செலுத்தி வந்திருக்கிறீர்கள். இந்த அவைக்குத் தலைமை தாங்கி தாங்கள் நடத்தி வருகின்ற பாங்கினை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மேலவை உறுப்பினர்கள் அனைவரின் சார்பாகவும் எடுத்துக் குறிப்பிட்டார்கள். தாங்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து, இந்த மேலவை பூரிப்பும், பெருமையும் கொள்ளத் தக்க அளவுக்கும், பெருமிதம் கொள்ளத் தக்க அளவுக்கும் நடத்தி, வேறு பல

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஏப்ரல் 11

மன்றங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்கத் தக்க அளவுக்கு வழி **நடத்திச் செல்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கெல்லாம் உண்டு. அந்த** வகையிலே மேன்மேலும் நீங்கள் பல்லாண்டு, பல்லாண்டு வாழவேண்டுமென்று வாழ்த்துவதிலும், நீங்கள் வளம்பல பெற்று நலம் பல எய்தித் திகழ வேண்டு மென்று எண்ணுவதிலும் நாங்கள் அத்தனை பேரும் பூரிப்பும் பெருமையும் கொள்கின்றோம் என்று சொல்லி, எங்கள் உளங்கனிந்த வாழ்த்துக்களை தங்களுக்கு உரிமையாக்கிக் கொள்கிறோம். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இந்த அவையில் கல்வி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அவையின் உறுப்பினர்கள் சார்பாக 69 ஆம் ஆண்டு முடிந்த என்னை இன்னும் பல்லாண்டுகள் வாழ வேண்டுமென்று வாழ்த்தியிருக்கிறார்கள். அவர்களுடைய நல் வாழ்த்துக்கள் என்னை மேன்மேலும் இந்த அவையை என்னுடைய சக்திக்கு எற்ற அளவுக்கு நடத்திச் செல்ல உதவும். அவர்களுடைய நல்வாழ்த்துக்களை அதற்கு ஒரு அருமருந்தாகக் கொள்கிறேன்.

நான்கு ஆண்டுகளாக தலைவராக இருந்து இந்த அவையை நடத்துகின்ற நான், எனக்கு இருக்கின்ற தனிப்பட்ட கோபங்களை எல்லாம் விட்டுவிட்டு (அவையில் சிரிப்பு), . . . என்னைப்பற்றி நம்முடைய அருமைத் தலைவர் அவர்கள் கேள்விப்படுகிறபோது கூட, பெரிய முன்கோபியாக இருப்பவன் போலிருக்கிறதே என்றெல்லாம் நினைத்துக்கொண்டிருந்த எண்ணத்தையெல்லாம் இந்தப் பதவியின் காரணத்தாலோ அல்லது நீங்கள் எல்லாம் தந்த ஒத்துழைப்பின் காரணத்தாலோ அல்லது இந்த அவையில் **எங்களை ஆளாக்கி வளர்த்த, கட்சியின் பெயரை, கண்ணியத்தைக் காப்பாற்ற** வேண்டுமென்ற காரணத்தாலோ,

" There is no democracy without a rival party; there is no democracy without opposition; a State of the people, by the people, for the people ".

என்று சொல்லி ஜனநாயக மரபுக்கு ஏற்ற மாதிரி, நான் வெளியே இருந்த போது எந்தெந்த கட்சிகளை மோசமாகத் தாக்கினேனே, அதற்குப் பதிலாகவோ என்னவோ, அவர்களை எல்லாம் அணைத்து, . . . இந்த அவையை சீரோடும் சிறப்போடும் நடத்தி வந்திருக்கிறேன். இன்னும் இருக்கின்ற இரண்டு ஆண்டுகளில் உங்களுடைய ஒத்துழைப்பு மிக நல்லமுறையில் அமையும் என்று சொல்லி, என்னை வாழ்த்திய உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் சொல்லிக்கொள்கிறேன். (அவையில் கையொலி)

1974 ஏப்ரல் 11]

3. அறிவிப்புகள்.

பேரவையிலிருந்து செய்திகள்.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Additional Sales Tax (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 16 of 1974), as passed by the Assembly, and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 (L.A. Bill No. 17 of 1974) and the Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 8 of 1974) as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.

4. கவன ஈர்ப்பு

புதுக்கோட்டை தேவஸ்தான ஊழியர்கள் ஊதிய உயர்வு கிடைக்கவில்லை என்ற அதிருப்தியில் நேரடி நடவடிக்கையில் இறங்கியிருப்பது குறித்து.

*தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"புதுக்கோட்டை தேவஸ்தானம் ஊழியர்கள் தங்களுக்கு அரசு அறிவித்த ரூபாய் 10 ஊதிய உயர்வு கிடைக்கவில்லை என்ற அதிருப்தியில் நேரடி நடவடிக்கையில் இறங்கி இருப்பது குறித்து".

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, புதுக்கோட்டை தேவஸ்தானங்களின் ஆளுகையில் 117 கோயில்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 850 ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்களில் 700 ஊழியர்கள் ஊழிய நிலங்களை அனுபவித்து வருவதோடு சொக்கச் சம்பளமும் பெற்று வருகிறார்கள். திருக்கோகர்ணம் கோயிலில் மட்டும் 159 ஊழியர்கள்

புதுக்கோட்டை தேவஸ்தான ஊழியர்கள் ஊதிய உயர்வு கிடைக்கவில்லை என்ற அதிருப்தியில் மேநாடி நடவடிக்கையில் இறங்கியிருப்பது குறித்து

[திரு. மு. கண்ணப்பன்] [1974 ஏப்ரல் 11

உள்ளார்கள். இவர்களில் 140 நபர்கள் ஊழிய நிலங்களை அனுபவித்துக் கொண்டு ரொக்கச் சம்பளமும் பெற்று வருகிறார்கள். ஊழிய நிலங்களை அனுபவித்துக்கொண்டு பணியாற்றி வரும் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு அளிக்க வேண்டிய அவசியமில்லையென அறங்காவலர்கள் தீர்மானித்துள்ளார்கள். மேற்படி தேவஸ்தானத்திற்கு அரசு மானியமாக வழங்கும் ரூ. 4,00,000 உள்பட வருடம் ஒன்றுக்கு வருமானம் சுமார் ரூ. 6,00,000 வருகிறது. இதில் சிப்பந்திகள் சம்பளம் மற்றும் அலவன்சுகளுக்கு வருடம் ரூ. 2,50,000 செலவாகிறது. தற்போதைய விலைவாசி உயர்வை உத்தேசித்தும் நியாயமான அளவில் சிப்பந்திகளுக்கு சம்பள உயர்வு கொடுக்கவும் அரசு மானியத்தை ரூ. 10 லட்சமாக உயர்த்திக் கொடுக்க வேண்டி அரசுக்கு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் பரிந்துரைத்துள்ளார். இப்பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது. ரொக்கச் சம்பளம் பெறும் தேவஸ்தான அலுவலக ஊழியர்களுக்கு மட்டும், தேவஸ்தான நிதி நிலைமையை அனுசரித்து ரூ. 5 சம்பள உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இதர ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்க முடியாத வகையில் மேற்படி தேவஸ்தானத்தின் நிதி நிலைமை உள்ளது. அரசு அறிவிப்புப்படி ரூ. 10 சம்பள உயர்வு கொடுப்பதனால், 850 சிப்பந்திகளுக்கு ரூ. 1,02,000 கூடுதல் செலவு ஏற்படுமென்றும், தற்போது மேற்படி தேவஸ்தானத்திற்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 6 லட்சம் செலவு ஏற்படுகிறதென்றும், இதில் அரசு மானியம் ரூ. 4 லட்சம் போக எஞ்சிய தொகையை உண்டியல் மற்றும் இதர வருவாயிலிருந்து செலவு செய்யப்பட்டு வருகிறதென்றும், 1-5-1974 முதல் தான் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக திருக்கோகர்ண தேவஸ்தான ஊழியர்கள் அறிவித்துள்ளார்கள் என்றும் தற்பொழுது வேலை நிறுத்தம் எதுவும் நடைபெறவில்லை என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

[மாண்புமிகு மேல்வைத் தூணைத் தலைவர் தலைமை]

(பிற்பகல் 5-10)

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஊழிய நிலங்களுக்கு, மூன்னள் இனம் சட்டத்தின்படி பல ஊழியர்களுக்கு பட்டா கொடுக்கப்படாமல், பிறருக்கு பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இப்போது நிலத்தை அனுபவிக்கவில்லை; பலர் அனுபவிக்கவில்லை என்பதை அரசு அறியுமாவென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துணைத் தலைவரவர்களே, வேறு நபர்கள் நிலங்களை அனுபவித்துக்கொண்டு வருவதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடம் இல்லை. தனியாக அவற்றைப் பரிசீலிக்கலாம். சம்பள உயர்வைப் பொறுத்தவரையில், தற்போது நிதிநிலை இடம் தரவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1974 ஏப்ரல் 11]

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : துணைத் தலைவரவர்களே, ஊழியர்களை அதிகமாக வைத்துக்கொண்டு சம்பளம் கொடுக்க முடியாது ; வேறு வசதிகள் செய்து கொடுக்க முடியாதென்று சொன்னால், மாற்று வழி பற்றி ஆலோசிக்க வேண்டும். அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே எண்ணிக்கை அதிகமென்று கருதினால், வேலைக் குறைப்பு செய்யலாமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவரவர்களே, வேலைக் குறைப்பு செய்தாலும், அதை வேண்டாமென்று சொல்பவர்கள் நம்முடைய அடிகளார் அவர்களிடத்தில் முறையிட்டால், அவர்களே இங்கே அதுபற்றி முறையிடுவார்கள். கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டில் சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வேலைக் குறைப்பு செய்ய வேண்டுமென்று யோசனை செய்த நேரத்தில், பொது மக்களின் பிரதிநிதிகள் வேண்டாமென்று சொன்ன காரணத்தால், மேற்கொண்டு புதிதாக ஊழியர்களை நியமிக்கக்கூடாதென்று முடிவெடுத்தோம். அந்த மாதிரி புதுக்கோட்டை திருகோகர்ணம் விஷயத்திலும் பின்பற்றலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசின் தீர்மானம்

அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"மேலவை விதி 21 (3)-ன் படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்ற அரசின் தீர்மானம் மற்றொரு கூட்டத்திற்குத் தள்ளி வைக்கப்பட வேண்டும்".

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 21(3)-ன் படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்ற அரசின் தீர்மானம் மற்றொரு கூட்டத்திற்குத் தள்ளி வைக்கப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. அரசின் சட்ட முன்வடிவுகள்

(1) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

'சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று மூன்மொழிகிறேன்.

தமிழநாடு 1964 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின்மீது உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 73 ( ) பிரிவின் கீழ் சட்டத்தின் தொடக்க நாளன்று இருந்த மலைத் தோட்டங்கள் அனைத்தும் **உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்பட்டன. மூலச் சட்டம்** செயலுக்கு வந்த நாள் 6—4—1960 ஆகும். எனவே 6—4—1960 அன்று மலைப் பகுதி அல்லாத ஏனைய ஒரு பகுதியில் இருந்த மலைத் தோட்டங்களுக்கு உச்ச வரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்பட்டன. தமிழ்நாடு 1970ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு குறைத்தல்) சட்டத்தின் கீழ் (தமிழ் நாடு சட்டம் 17/1970) மூலச் சட்டத்தின் 3-ஆவது பிரிவைச் சேர்ந்த (11) பகுதியில் கண்டுள்ள "மேற்படி சட்டம் தொடங்கிய நாள்" என்ற சொற்றொடரின் பொருள் விளக்கம் மாற்றியமைக்கப்பட்டு அத் தொடக்க நாள் 1970 பிப்ரவரி 15 ஆம் நாளாக மாற்றப்பட்டது. இதன் விளைவாக 73 (vi) பிரிவில் குறிப்பிட்டுள்ள மலைத் தோட்டங்கள் குறித்த விலக்கு 15—2—1970 அன்று மலைப் பகுதி அல்லாத ஏனைய ஒரு பகுதியில் இருந்த மலைத் தோட்டங்களுக்குப் பொருந்துவதாகப் பொருள் கொள்ளப்பட வேண்டும். மலைப்பகுதிகளைப் பொறுத்தவரையில், மலைத் தோட்டங்கள் மேற்படி சட்டத்தின் 73 (v) பிரிவின் கீழ் முழு விலக்கு அனுபவித்து வந்தன. மலைப்பகுதி நிலம் குறித்த விலக்கு தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின்மீது உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 10/1972) 1972 மார்ச் 1 ஆம் நாள் முதற்கொண்டு ரத்து செய்யப் பட்டது. ஆகவே மலைத் தோட்டங்கள் குறித்த விலக்கு 6—4—1960 அன்று

@ 122–123 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 ஏப்ரல் 11] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

இருந்த மலைத் தோட்டங்களுக்கு மட்டும் அளிக்கப்பட வேண்டுமா அல்லது 15—2—1970 அன்று இருந்த மலைத் தோட்டங்களுக்கு அளிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து அரசு பரிசீலனை செய்தது. இந்த விலக்கு 1960 **ஏப்ரல் 6-ஆம் நாளன்று இருந்த மலைத் தோட்டங்களுக்கு மட்டும் அளிக்கப்பட** வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அவ்வண்ணமே தமிழ்நாடு 1974 ஆம் **ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு** கட்டுதல்) 5-வது **திருத்தச்** சட்டம் (தமிழ் நாடு சட்டம் 10/1974) இயற்றப்பட்டது.

மலைத் தோட்டங்களுக்கு அளிக்கப்பட்ட விலக்கு 1960 ஏப்ரல் 6-ஆம் நாளன்று இருந்த மலைத் தோட்டப் பரப்புக்கு மட்டும் பொருந்தும் என்னும் கட்டுப்பாடு, மலைத் தோட்டத் தொழிலைப் பாதிக்கும் என்றும், மலைப் பகுதிகள் முழு விலக்கை அனுபவித்துக் கொண்டிருந்த கால அளவில் புதிய பகுதிகளில் மலைத் தோட்டங்களை விரிவுபடுத்தியவர்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் 1960 ஏப்ரல் 6-ஆம் நாளுக்குப் பிறகு மலைத் தோட்டங்களை விரிவு படுத்த முயற்சி மேற்கொள்ளாத மலைத் தோட்ட உரிமையாளர்கள் பாதிக்கப் **படவில்லை என்றும் முறையீடுகள் வந்துள்ளன. மலைத் தோட்டங்களிலிருந்து அன்னியச் செலாவணி கிடைப்பதால் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு** மலைத் தோட்டத் தொழிலுக்கு தனிச் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்ற இந்திய அரசும் பரிவுரை செய்துள்ளது. எனவே, அரசு இதனைப் பரிசீலனை செய்து, தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு 17-ஆம் சட்டத்தினால் திருத்தப்பட்ட **படியுள்ள மேற்படி சட்டத்தின் தொடக்க நாளாகிய 15—2—1970 அன்று** மலைத் தோட்டங்கள் உச்ச வரம்பு சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்துள்ளது. இதைத் தவிர, அவை நில வாரியத்தின் அனுமதியுடன் அத்தகைய மலைத் தோட்டங்களை அடுத்து அமைந்துள்ள **அல்லது இடையிடையே அமைந்துள்ள நிலப் பரப்பில் மலைத் தோட்டத்தை** விரிவுபடுத்தும் காரியத்திற்காக அல்லது மலைத் தோட்டத்தின் ஏனைய தொடர் பான காரியங்களுக்காக 1970 பிப்ரவரி 15-ஆம் நாளன்று இருந்த மலைத் தோட்டங்களின் பரப்பளவில் 20 சதவீதம் வரையில் உள்ளவையுமான கூடுதல் நிலங்களை, மேற்படி சட்டத்தின் 31-வது பிரிவின் கீழ் வைத்துக் கொள்ளவும் அவை தகுதியுடையவையாகும். மேற்படி நோக்கத்தை எய்துவது இச் சட்ட வரைவின் நோக்கமாகும்.

இப் பிரேரணையை இம் மேலவை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974)

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 11

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம் :—

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. டி. கே. பொன்னுவேலு: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருப்பதை நான் முழு மனதுடன் ஆதரித்து, வரவேற்கிறேன்.

நேற்றைய தினம் குறிப்பிட்டதைப் போலவே, நிலத்தைப் பொறுத்த வரையில், எந்த அளவிலே சீர்திருத்தம் செய்தாலும், அதை முழுமையாக ஆதரிக்க நான் முற்படுபவன். அந்த அளவிலே மட்டுமல்ல, நிலத்தைப் பொறுத்த அளவில், விவசாய நிலம் முழுமையாக தேசிய உடைமையாக்கப்பட வேண்டுமென்று சொன்னாலும், உற்பத்திக்கு ஆபத்து எனினும், தான் அந்தத் தொழிலில் ஈடுபட்டதாலும், எனக்கும் நிலச் சொத்து இருப்பதாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனோபாவம் உடையவன் நான். அந்த அளவில் நிலச் சீர்திருத்தங்கள் அனைத்தையும் வரவேற்கப் பெரிதும் விரும்புகிறேன்.

நிலச் சீர்திருத்தச் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால், 1947-ல் இது துவக்கப்பட்டு முதன் முதலாக சட்டமென்ற அளவில் 1961-ல் உருவாக்கப்பட்டு, 1960-லிருந்து 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்து, கடந்த 15 வருஷங்களில் பல முறைகளிலே சீர்திருத்தம் என்னும் பெயரில் செய்து வருகிறோம். நேற்றைய தினம் குறிப்பிட்டதைப் போல, இன்னும் 15 வருஷங்களிலே அது முடிவடையக்கூடும், அல்லது பிரச்சினைகளை திசை திருப்ப 100 ஆண்டுகள் கூட ஆகலாம். ஆனால், இப்படி நீண்ட காலம் வரையில் சீர்திருத்தங்கள் அனைத்தும் இந்திய மண்ணில் வேறும் விவசாயத்தைப் பொறுத்த அளவிலேதான் என்பது தர்மமற்றது, நீதியற்றது, நியாயமற்றதென்பதை நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வருவாய் தரக்கூடிய எந்தத் தொழிலானாலும், பணப் புழக்கம் உள்ள எந்த நிலையானாலும், அவைகளுக்கு உச்சவரம்பு வந்துதான் தீர வேண்டும்.

1974 ஏப்ரல் 11] [திரு. டி. கே. பொன்னுவேலு]

நான் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயி மிகவும் சாதுவானவன்; பொறுமையின் சிகரம். சென்ற ஆண்டு மின் சக்தி 75 சதவிகிதம் வெட்டப்பட்ட நேரத்தில், அவனுடைய பயிர், பச்சையெல்லாம் கெட்டு, போட்ட பணமெல்லாம் மண்ணோடு மண்ணாகியது. அப்போது அவன் நிதானம் இழக்கவில்லை என்பது நாடு கண்ட ஒன்றாகும். ஆனால், அதே விவசாயி—அரக்கோணம் தாலுகாவில், திருத்தணி தாலுகாவில், காஞ்சிபுரம், மதுராந்தகம், உத்திரமேரூர் தாலுகாக்களில் இருபது நாட்களுக்கும் முன்னால் தொடர்ந்து 72 மணி நேரம் மின் சக்தி வராததன் விளைவாக ஈத்தேறிக் கொண்டிருந்த நெற் கதிர்கள் பாதிக்கப்பட்டு, 30, 35 சதவிகிதம் அவனுடைய உற்பத்தியும் பாதிக்கப்பட்ட நேரத்தில் விவசாயி வீதிக்கு வந்தான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சட்ட முன்வடிவின் பேரில் கருத்துச் சொல்லுங்கள். இது பொது விவாதமல்ல.

(பிற்பகல் 5-20)

திரு. டி. கே. பொன்னுவேலு: வீதிக்கு வந்த அவன் நீதி கோரினான், யாரும் அதற்குத் தாண்டவில்லை; தண்டோரா போடவில்லை. யாரும் அதற்குத் தலைமை வகிக்கவில்லை. யாரும் துண்டு நோட்டீஸ் போடவில்லை. ஆனால், விவசாயி வீதிக்கு வந்து நின்றான். ஓடிய ரயில்கள் நின்றன. பொருளீட்டித் தந்த பேருந்துகள் தடுத்து நிறுத்தப்பட்டன என்பதைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, விவசாயியினுடைய பொருளாதாரத்தில் சீர் திருத்தங்கள் தேவையற்றது, கூடாதது, ஆகாதது, அக்கிரமமானது என்று நான் கூறமாட்டேன். அவை நிச்சயம் செய்யப்பட்டாக வேண்டும். இன்றில்லா விட்டால் நாளை, அதற்கு முழுமையான சீர்திருத்தம் தேவை என்பதை ஒத்துக்கொண்டாக வேண்டும். ஆனால், இந்தச் சீர்திருத்தத்தை விவசாயத்தில் ஆரம்பித்து, விவசாயத்திலேயே முடிக்கக்கூடாது என்பதனை நான் பணிந்து தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடிப்படையாக ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் இன்றைய தினம் ஸ்டாண்டர்டு எக்கரா என்று சொல்வதே, நான் ஏற்கெனவே ஆளுநர் உரையில் குறிப் பிட்டதுபோல, விவஸ்தையற்றது. விவகாரம் தெரியாதவர்கள் . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இது பிளான்ட்டேஷன் பற்றியது. நீங்கள் நீலச் சீர்திருத்தத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தால் என்ன ஆவது?

[1974 ஏப்ரல் 11

திரு. டி. கே. பொன்னுவேலு : நிலத்தைப்பற்றிய விவகாரமே தெரியாத வர்கள், களர் நிலத்திற்கும் கரிம்பு நிலத்திற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள், சேற்றுக் காலுக்கும் புழுதிக்காலுக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள், ஸ்டாண்டர்டு ஏக்கராவைப்பற்றிய இலக்கணம் வருத்ததைத் தவறு என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம் முன்னுள்ள சட்ட முன்வடிவைப் பொறுத்து அந்நியச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய பிளான்டேஷனைப்பற்றி அரசு எடுத்துக்கொண்டிருக்கக் கூடிய நடவடிக்கை நிச்சயமாக வரவேற்கத் தக்கது; விரும்பத் தக்கது. எவ்வளவுதான் நிலங்களைக் குறைக்க வேண்டும் என்று சொன்னாலும், அந்த நிலம் பணம் ஈட்டவேண்டிய ஒரு கருவி என்பதால், அது அந்நிய நாட்டுச் செலாவணியை நமக்குப் பெற்றுத் தருவது என்பதால், அதைப் பெரிய அளவிலே இன்றையதினம் உற்பத்தி செய்யவேண்டிய நிலை இருப்பதனால், இப்படிப்பட்ட சட்டம் தவிர்க்க முடியாத தேவையாகிறது. அப்படிப்பட்ட சட்டத்தை நான் வரவேற்கப் பெருமைபடுகிறேன்.

மாண்புமிகு மேல்வைத் தூணைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவிற்கு சம்பந்தமாகப் பேசுங்கள்.

திரு. டி. கே. பொன்னுவேலு : இனி பேசப்போவது சட்டத்திற்கு சம்பந்த மில்லாதது என்றாலும், என்னுடைய பேச்சு இதுவே கடைசிப் பேச்சாக இருக்கப் போவதால், துணைத் தலைவர் அவர்களே, அருள்கூர்ந்து ஒரு விவகாரத்தைப்பற்றிப் பேச அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்தபோது நாட்டுப் பிரிவினை மிலே ஆர்வம் கொண்டிருந்தவன். இன்னமும் அதிலே அசைக்க முடியாத நம்பிக்கை உடையவன். இன்றைய தினம் மாநில சுயாட்சிபற்றிப் பேசுகின் றோம். அதுபற்றி இந்த மன்றத்திலே விவாதிக்கின்ற நேரத்திலே நான் இருக்க மாட்டேன். ஆகவே, அதுபற்றி ஒன்றை நான் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் அணியில், டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே இந்த மாநில சுயாட்சிக்காக எடுக்கக்கூடிய எந்த நடவடிக்கைக்கும் என்னையும் என்னுடைய எல்லா உடமையையும் எந்த நேரத்திலும் எதற்கும் தருவதற்கு நான் சித்தமாக இருக்கின்றேன் என்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை வர வேற்று நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

* THIRU A. R. DAMODARAN : Sir, I rise to welcome this Bill which has been brought forth by the Hon. Minister I was one of those who, in those days when they wanted to bring in plantations also within the Ceiling Act, pointed out that plantations had to be considered differently from agricultural lands not only for the reason that had been given that the plantations earned foreign exchange but because of an even more important consideration, namely, that if we put a ceiling on plantations and if we got surplus land in plantations, there was no possibility of utilising the surplus land, by allotting it to the landless labourer or poor labourer, because plantation was an industry which required a great deal of investment and capital. Therefore, even at that time, we pointed out that it would be ruinous to the plantation industry, not only ruinous to the plantation industry and to the earning of foreign exchange but also ruinous to the labourers because no benefit would accrue to either the landless labourers or that class of cultivating tenants who would otherwise be benefited by a ceiling on agricultural land. I, therefore, welcome this provision. It has been made out as if this is a great concession. Actually what has been done in this Amending Bill is that whereas plantations under the 1960 Act were even then exempt from the ceiling provisions, all that this Government have done is that new plantations which have come up after 1960 are sought to be exempted from the ceiling area. If these new plantations also are now sought to be exempted, I think, from the point of view of the growth of plantations, we must also bear in mind that if there is a class of agricultural labourers which has benefited most by modern labour legislation, it is the plantation workers who today enjoy many benefits. The plantation labourer is entitled to medical relief and he is given housing facilities. I do not say that they are getting all that which they do not deserve. They deserve to get them. But, nonetheless, it cannot be gainsaid that they are in a better position than many of the poor agricultural labourers and landless labourers who are cultivating agricultural lands in the plains. The exemption of plantations will enable the good growth of these plantations not only from the point of view of the benefit of earning more foreign exchange but also from

[Thiru A. R. Damodaran] [1974 ஏப்ரல் 11

the point of view of the agricultural labourers who are employed on these plantations. I believe that the relaxation from the ceiling operation would be of great benefit to the labourers and from this point of view also I welcome this Amending Bill, Thank you.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இப்பொழுது அவைமுன் விவாதத்திற்கு வந்திருக்கிற மசோதாவில், 1970 ஆம் வருஷத்தில் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, ஒருவர் மலைத் தோட்டத்தில் எவ்வளவு வைத்திருந்தாரோ, அந்த அளவுக்கு அவருக்கு விதிவிலக்குக் கொடுப்பதற்கு வகைசெய்வதற்காக இப்பொழுது இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. இன்னும் ஒருபடி மேலே சென்று இதிலுள்ள கஷ்டத்தை அரசாங்கத்திற்கு நான் சொல்ல விரும்புகிறேன். கீழே plains பிளேன்ஸில் நன்செய் அல்லது புன்செய் நிலம் **வைத்திருப்பவர்கள் 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்குமேல் வைத்திருக்கக்கூடாது** என்று எல்லோருக்கும் ஒரேமாதிரியாக, சமமாக ஒரு வரையறை செய்து சட்டம் நிறைவேற்றியிருக்கின்றோம். ஆனால், மலைத் தோட்டங்களைப் பொறுத்த வரையில், அம்மாதிரியில்லை. ஒரு உச்சவரம்பே இடையாது. ஒருவர் ஆயிரம் ஏக்கர் வைத்திருக்கிறார். இன்னொருவர் 50 ஏக்கர் வைத்திருக்கிறார். ஒருவர் 15 ஏக்கரும் வைத்திருக்கிறார். நான் பல மலைத் தோட்டங்களைப் பார்த்திருக்கிறேன். இப்பொழுது அந்த 15 ஏக்கர் வைத்திருப்பவர் அதற்கு மேல் இனி மேல் வாங்கக்கூடாது என்று இந்தச் சட்டம் தடை செய்கிறது என எண்ணுகிறேன். 1970 ஆம் வருஷத்தில் திருத்தச் சட்டம் நிறைவேற்றியபோது அவர் எவ்வளவு வைத்திருந்தாரோ, அதற்குமேல் இருக்கக்கூடாது. இடையிடையே காலியிடம் இருந்தால் அதில் பயிர் செய்யலாம். எவ்வளவு நிலம் இருக்**கிறதோ அதில் ஐந்தில் ஒரு பகுதி, அதாவது 20 சதவிகிதம், பிளான்டேஷன்** போட்டுக்கொள்ளலாம். ஒருவர் 15 ஏக்கர் வைத்திருந்தாரென்றால், இன்னும் 3 ஏக்கர் அதிகமாக மலைத் தோட்டமாகச் சேர்த்துக்கொள்ளலாம். இதுதான் இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் மற்றவர்கள் 500 ஏக்கர், 1,000 ஏக்கர் என்ற அளவில் வைத்திருக்கிறார்கள். ஒருவர் 50 ஏக்கர் வைத்திருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவருக்குப் பக்கத்தில் இன்னொருவர் 15 ஏக்கர் வைத்திருக்கிறார். 15 ஏக்கர் வைத்திருப்பவர் போதிய நிதி வசதி இல்லாமல் சரியாக அந்தத் தோட்டத்தைப் பராமரிக்க முடியவில்லை யென்றால், அதை அடுத்தாற்போல் இருக்கிற 50 ஏக்கரா வைத்திருப்பவருக்கு விற்றுவிட்டு வெளியே போக இப்பொழுது இடமில்லை. அதே நேரத்தில், அந்தத் தோட்டத்திற்கு ஒரு மைலுக்கு அப்பால் 500 ஏக்கர், 1,000 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தோட்டங்களும் இருக்கின்றன. இப்படி நிலைமை

1974 ஏப்ரல் 11] [திரு. கே. ராஜாராம்]

இருக்கும்போது இவரை நாம் ஏன் கட்டுப்படுத்த வேண்டும்? பொதுவாக நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஏலத் தோட்டம், காப்பித் தோட்டம், தேயிலைத் தோட்டம் ஆகிய மூன்றுதான் முக்கியமாக இருக்கின்றன. இந்த மூன்றும் அந்நியச் செலாவணியை நமக்கு சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய தொழில்கள். இவற்றை வெறும் விவசாயம் என்று சொல்வதற்கில்லை. இவை தொழில்கள். ஆகவேதான் மத்திய அரசு இவற்றுக்கு 'லேண்ட் சீலிங்'கே கூடாது என்ற அபிப்பிராயத்தைச் சொல்லியிருந்தது, சொல்லிக்கொண்டும் இருக்கிறது. ஆகவே, நாம் கொண்டுவரும் திருத்தச் சட்டத்தில், இப்பொழுது இருக்கிறது அப்படியே இருக்கட்டும், அதிகப்படுத்தவேண்டாம் என்று சொல்வது நியாயமா? ஒருதலைப்பட்சமான நிர்ப்பாக அது அமையாதா என்று அறிய நான் விரும்புகிறேன். 50 ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவன் அதோடு இருக்க வேண்டும், 1,000 ஏக்கர் வைத்திருப்பவன் அப்படியே வைத்துக் கொள்ளலாம், குறைக்கக்கூடாது என்றால், இது என்ன நியாயம்? இதை உடனடியாக இப்பொழுதே முடிவு செய்யவில்லையென்றாலும், இதை யோசிக்க வேண்டும். இது ஒரு நியாயமான குறை என்று அரசாங்கத்திற்குக் கூறிக் கொள்கிறேன். இதை யோசித்து பிறகாவது வழிசெய்யக் கேட்டுக்கொள் கிறேன்.

(பிற்பகல் 5-30)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, 6—4—1960 ஆம் தேதியில் எவ்வளவு இருந்ததோ அது பழைய சட்டத்திலேயே எக்செம்டெட். அதை விற்கக்கூடாது என்று எப்படி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்லுகின்றார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் சொல்லும் வாதம் சரியான வாதம்தான். ஒரு இடத்தில் ஒருவர் 500 ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கின்றார். அவர் நன்றாக வாழ்கின்றார். இன்னொரு இடத்திலே வேறு ஒருவர் ஒரு 15 ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கிறார். இவர் அதை வைத்துக்கொண்டு சரியாக வாழ முடியவில்லை. இவர் அதை விற்கலாம் என்றால், அவர் அதை வாங்க முடியாது. 20 சதவிகிதத்திற்கு மேலே அவர் விரிவுபடுத்த முடியாது. விற்கவும் முடியாது என்ற நிலையில்....

திரு. கே. ராஜாராம்: விற்கலாம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுதான் எனக்குத் தெரியவில்லை. அவர் ஒரு ஆயிரம் ஏக்கர் வைத்திருப்பதை விரிவுபடுத்துவதற்குத்தான் செக்ஷன் 31 எக்ஸெம்ப்ஷன். இதிலே ஏதாவது கஷ்டம் இருந்தால், அதைப்பற்றித் தனி யாக ஆராயலாம்.

தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974)

[1974 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இதற்கு வேண்டிய விளக்கத்தைக் கொடுத்து விட்டார்கள். அநேகமாக இந்தச் சட்டத்தை எல்லோருமே வரவேற்றிருக்கின்றார்கள். எனவே, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. அதைத்தான் நான் சொன்னேன். அடுத்தவருடைய சிறிய தோட்டத்தை இவர் வாங்கிக்கொண்டால், ஏற்கெனவே இவர் வைத்துக்கொண்டுள்ள தோட்டத்தை இவர் விரிவுபடுத்துவதாகத்தான் அர்த்தம். விஸ்தீரணம் அதிகப்படுத்தப்படுகிறது. 100 ஏக்கர் இருக்கும் போது, பக்கத்தில் 15 ஏக்கர் வாங்கினால், அதற்குச் சட்டம் இடம் கொடுக்குமா என்பதில்தான் அச்சம் இருக்கின்றது. ஏனென்றால், 20 சதவிகிதம் வரையில் அதிகப்படுத்தலாமே தவிர, மேற்கொண்டு அதிகப்படுத்த இடமில்லை என்று சட்டத்தில் இப்போது சொல்லியிருக்கிறோம். இந்தச் சட்டத் திருத்தத்திலும் இருக்கின்றது. அப்படி இருக்கும்போது 50 அல்லது 100 ஏக்கர் வாங்குவது என்றால், எப்படி இடம் கொடுக்கும் என்ற சந்தேகம் இருக்கின்றது. இந்தச் சங்கடத்தைத் தீர்க்க வேண்டுமானால், வேறு ஒரு திருத்தத்தின் மூலமாவது இதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஏற்பட்டிருந்தால் 73-வது பிரிவின்படி

" All plantations in existence on the date of the commencement of this Act are exempted "

யாருக்கு வேண்டுமானாலும் விற்கலாம். ஆனால் 31-வது பிரிவுப்படி நிலை வேறு. அது வேறு ஒரு பிரிவு. 1,000 ஏக்கர் இருந்தால், அதை எப்படி விஸ்தரிக்கப்போகிறார்? வேறு ஒரு இடத்தில் வாங்காமல்? அதே நபர் வேறு ஒரு இடத்தில் ஒரு ஆயிரம் ஏக்கர் வாங்கக் கூடாது என்று இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிக் கஷ்டம் இருந்தால் . . .

திரு. கே. ராஜாராம் : அதற்காகத்தான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுவரையில் அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. 31-வது பிரிவிற்குள் ஒரு ஆயிரம் ஏக்கருக்குள்ளாக அல்லது 'கண்டிகுஅஸ்'—அதற்கு 20 சதவிகிதத்திற்கு மேலே போகக் கூடாது.

1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, **நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட** முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்களே,

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974) நிறைவேற்றப் படவேண்டும் "
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974) நிறை வேற்றப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்களே,

தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, கூடுதல் விற்பனைவரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974)

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 11

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

விற்பனை வரி சீரமைப்பில் முக்கியமான அம்சம் வரையறுத்துள்ள விற்பனையின் அளவு ரூ. 25,000 லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்தப்பட்டதாகும். இந்த வசம்பு வரை, விற்பனையின் அளவுள்ள வியாபாரிகளுக்கு வரி விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. இதனை வர்த்தக சமுதாயமும், சிறு வியாபாரிகளும், பொது மக்களும் வரவேற்றுள்ளனர். இதனால் 40,000 சிறு கடை வியாபாரிகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட இழப்பு ஏற்படும். அதை ஈடு கட்டுவதற்கும், நிதி வசதியைப் பெருக்குவதற்கும் எற்ற வகையில் ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய்க்கு மேல் மொத்த வியாபாரத் தொகையை உடைய வணிகர்களால் தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1/1959) செலுத்தத்தக்க வரி மீது விதிக்கத்தக்க கூடுதல் விற்பனை வரி வீதத்தை 1974-75-ஆம் வரி விதிப்பு ஆண்டு முதற்கொண்டு 5 சதவீதத்திலிருந்து 10 சதவிதமாக உயர்த்த அரசு முடிவு செய்தது.

இறக்குமதியாளர் ஒருவரால் அல்லது மொத்த விற்பனை வணிகர் ஒருவரால் தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 6/1939) செலுத்தத்தக்க வரி மீது விதிக்கத் தக்க கூடுதல் விற்பனை வரி வீதத்தையும் 1974-75 வரி விதிப்பு ஆண்டிலிருந்து 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

மேற்சொன்ன செயற்குறிப்புகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட வரைவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 16/1974) கொண்டுவரப்பட்டு, அது பரிசீலனைக்காக அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

@ 77ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது

1974 ஏப்ரல் 11] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

Thiru A. R. DAMODARAN : Sir, on the face of it this seems to be a very simple measure. But, I think, I should take this opportunity of pointing out that it has very dangerous over-tones. Even when this Act was introduced in 1970, I took objection to the levy of surcharge on sales tax collected on various grounds to which I shall refer briefly in my address. First, Sir, the reason given by the Hon. Minister is that since 59 items have been brought under single-point tax, a loss of revenue is expected by the Government and, therefore, to make up this revenue, this surcharge is being increased from 5 to 10 per cent. This is not really borne out by facts if we take note of the sales tax revenue of the Tamil Nadu Government over a period of one decade. Sir, in the Revenue Estimates given for the years 1972–73, 1973–74 and 1974–75, the gross sales-tax revenue, both under the Central Sales Tax Act and under the State Sales Tax Act, amounted to Rs. 115 crores and odd in the year 1972–73; and the revenue estimates for the year 1973–74 come to Rs. 128 crores, accounting for an increase of over Rs. 13 crores within a period of one year. Considering the fact that prices of all commodities have registered an increase, not only because of the rise in manufacturing costs but also because of the rise in excise duties, one can confidently expect that the sales tax revenue of the Tamil Nadu Govarnment even without this measure would be well over Rs. 145 crores for the year 1974–75. In these circumstances, I consider it a very weak argument for the Hon. Minister to state that it is necessary to increase the surtax on sales tax. One of the reasons given is that this is a tax that will be borne by the richer sections of the trading community and that this will not be passed on to the consumers. Sir, I wish to join issue with the Hon. Minister on this cardinal principle whether the additional burden because of the levy of this additional sales tax would not be passed on to the consumer because of the so-called prohibition that is contained in the original Act of 1970. Sir, even at that time, I pointed

[Thiru A. R. Damodaran] [1974 ஏப்ரல் 11

out that the State Government had really no powers, either Constitutional or otherwise, to prevent an increase in the price of commodities by putting in a clause in the Tamil Nadu Additional Sales Tax Act of 1970 saying that this shall not be passed on to the consumer. The State Government will have the power to fix the prices of commodities only on a very limited range of products and out of 120 items or 125 items that are brought under the sales tax, I would like to inform the Hon. Minister that he has powers in respect of less than 10 items to control the sale price of the commodities. In 1970 when the price of petroleum products had to be increased because of the additional sales tax, the Oil Companies were asked to pay this additional sales tax and not to pass this on to the consumers of petroleum products. I think that even the Hon. Minister will accept that this has not been borne out by facts and that only 3 or 4 months later, the Oil Companies increased the price of all petroleum products, of course, not putting in their bills as additional sales tax, but as an increase in the price of the commodity itself.

(பிற்பகல் 5-40)

Sir, I refer to the fact that there are over 110 commodities, and I would like the Hon. Minister to kindly elucidate whether the power he has given in this Bill is illusory or merely a sort of moral obligation on business houses not to increase the prices of their commodities. For example, I would like him to tell us whether he can control the prices of typewriters, tabulating machines, calculating machines and duplicating machines, on which we levy a sales tax and on which obviously an additional surtax would be levied. There are motor vehicles batteries, refrigerators, wireless reception instruments and apparatuses, radios and radiogramophones, electric valves, cinematographic equipment, photographic and other cameras—in fact, I have to single out one or two items only where the State Government really have the power to impose price-control and see that this burden is not passed on to the consumer. Therefore, the argument that this is going to be paid by the 4,000 rich traders in Tamil Nadu is entirely without foundation or basis and the Government will have to reconcile themselves to the fact that this so-called surtax is really an increase in the basic sales tax on all these commodities and the entire

burden, at least 95 per cent of the burden of this tax is going to be passed on to the consumer.

Sir, I now come to the second Constitutional difficulty in the State Government trying to prevent traders from passing on this tax to the consumers. Sir, in the Schedule of powers given under the Constitution, sales tax is a State subject and the Government of Tamil Nadu have no power whatsoever to levy a tax on the income of an individual. Even in 1970, I pointed out that this additional surtax was really a tax on the profits made by a commercial concern or an individual and as such it was clearly unconstitutional and not contemplated in the Constitution of India. Article 276 of the Constitution—which is the only clause which could perhaps be quoted by the Hon. Minister in support of his claim that a tax could be levied in these circumstances—reads

" Notwithstanding anything contained in article 246, no law of the Legislature of a State relating to taxes for the benefit of the State or of a municipality, district board, local board or other local authority therein in respect of professions, trades, callings or employments shall be invalid on the ground that it relates to a tax on income ".

Sir, the surtax on Sales Tax, obviously, is not a tax on professions, trades, callings or employments and, therefore, I believe that this would be clearly unconstitutional. Even when the tax was levied in 1970, I understand that a few persons, commercial concerns, took up this matter in the High Court of Judicature, Madras and a decision was given that this tax was a valid tax and that the State had power to levy this tax. Sir, the persons could have gone on appeal to the Supreme Court. They did not choose to do so because they had the option which was actually given to them of increasing the prices of commodities. Not only that; when the incidence of additional tax was only 5 per cent, not many would have decided to go to the extent of going on a Writ to the Supreme Court and spending thousands of rupees and getting an illusory benefit and, therefore, it was not chosen to take this matter to the Supreme Court. The danger now is that when the tax is increased to ten per cent of the sales tax paid,

the incidence will become so heavy that willy-nilly the person will have to go to the Court and find out whether it is constitutionally possible for a State Government to levy a tax on income.

Sir, we must realise that sales tax has increased steadily from the date on which it was introduced, when it was hardly one, two or three per cent. Now, we are levying sales tax at the rate of almost 25 per cent on certain articles like molasses and other preparations. If it is taken into account that 10 per cent of that 25 per cent will have to be paid out of the income that is generated from the trade, one can readily realise that it will constitute a great burden on the businessman, if he is not expected to pass it on to the consumer and if he is expected to pay it out of his profits. Therefore, I believe that in raising the surtax from 5 per cent to 10 per cent, the Tamil Nadu Government are endangering the very principle of the Bill that was introduced in 1970, that it is inviting litigation and by so doing there is the possibility of the entire Act being struck down as unconstitutional. Sir, I would prefer that this cancerous growth of sales tax is not resorted to. Especially, in the year 1974, when the Hon. Ministers have been promising us that everything would be rationalised, to continue a surtax and a surcharge on sales tax is not really rationalisation, but it is merely promoting further complications in the administration of the Act. Although from the point of view of revenue, the Hon. Minister may feel that he could gain an additional Rs. 2 or 3 crores, I am afraid that in actual practice this will not only constitute a heavy burden on the consumer and more that, after having passed on the price to the consumer, the commercial firms or the business may also get the additional relief of having this Act declared null and void, with the result that the benefit would neither accrue to the consumer nor to the Government but would fill the pockets of individual enterprises. I would, therefore, plead that fresh rethinking should be done on this issue. In fact, even in the Budget Speech, I appealed to the Hon. the Chief Minister to consider the constitutional validity of this Bill. Even if he is convinced that there are some grounds for considering it to be constitutionally valid, I would appeal to him to consider further the inability of the State Government to exercise price-control on 95 per cent of the commodities that come under the sales tax and to realise that what has been

originally contemplated in the Bill is only a homily and that it cannot act as a legal compulsion on traders. Even on this ground, Sir, I feel that this is a heavy burden on the business community and the consumers. I would, therefore, urge that this Bill be dropped and that the topic be further investigated and if necessary, we should study its implications before venturing to pass it, in haste, in this House. Thank you.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிக்க துணைத் தலைவரவர்களே, இந்தத் திருத்தச் சட்டம் 1970 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 14-வது சட்டத்தில் கண்டுள்ள 2, 3 ஆகிய பிரிவுகளைத் திருத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதில் இரண்டாவது பிரிவு பொது விற்பனை வரியைப் பொறுத்த விஷயம். 3-வது பிரிவு, பெட்ரோல் மற்றும் அது சம்பந்தப்பட்ட எண்ணெய் பொருள்களைப் பற்றிய விஷயம். இவை இரண்டுக்கும் விற்பனை வரியின் பேரில் 5 சதவீதம் அதிகப்படியாக, அடிஷனல் டேக்ஸ் என்று விதிப்பதற்காகத் முன்னால் மசோதா கொண்டு வந்தபோதே, நாங்கள் அதை எதிர்த்தோம். அப்பொழுது அரசாங்கத்தின் சார்பில், அந்த வரி கன்ஸ்யூமர் தலையில் தள்ளப் படமாட்டாது, கன்ஸ்யூமரிடமிருந்து வசூல் செய்யப்பட மாட்டாது என்று சொல்லப்பட்டது, ஆனால், நடைமுறையில் அப்படி இல்லை. வியாபாரிகள் விற்கும் அந்தச் சரக்கில் விலையையே ஏற்றிவிடுகிறார்கள். நண்பர் திரு. ஏ. ஆர். தாமோதரன் போன்ற எண்ணெய் வியாபாரிகள் வேண்டுமானால் அவ்வாறு விலையை ஏற்ற முடியாது. ஏனெனில், பெட்ரோலின் விலையை விட்டருக்கு இவ்வளவு என்று நிர்ணயித்து விடுகிறார்கள். அதன் பேரில்தான் அவர்கள் வரி செலுத்த வேண்டும். அவர்கள் வாங்கி உபயோகிப்பவர் தலையில் தள்ள முடியாது. மற்ற எண்ணெய்ப் பொருள்களை விற்கின்றவர்கள் அந்த வரியை கன்ஸ்யூமர்கள் தலையில்தான் தள்ளுவார்கள். அந்த வகையில் விலையை ஏற்றி விடுவார்கள்.

(பிற்பகல் 5-50)

இதை யாரும் தடுக்க முடியாது. இன்றைக்கு என்ன நடக்கிறது என்றால் 'செட்டி நட்டம் குடியிலே' என்று சொல்லுவார்கள். அந்த மாதிரி அரசாங்கம் வசூலிக்கின்ற அதிகப்படியான வரியை குடிமக்கள் பேரில், பொருள்கள் பேரில் விலையேற்றி வசூலிக்கிறார்கள். இதை யாரும் இல்லையென்று சொல்ல முடியாது. மக்களிடத்தில் வசூலிக்கவில்லை; 10 லட்சம் ரூபாய்க்கு மேல் டர்னோவர் செய்கிற வியாபாரிகளிடத்தில் மட்டும்தான் வசூலிக்கப்படுகிறது என்று சொன்னால், தம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது போன்ற நிலைமைதான்

[திரு. கே. ராஜாராம்] [1974 ஏப்ரல் 11

இருக்கும். ஏனென்றால், சட்டபூர்வமாக அப்படி இருக்கலாம். அவர்களுடைய பேரேடுக் குறிப்பில் கணக்கு எழுதித்தான் செலுத்துகிறார்கள். ஆனால், சரக்கின் பேரில் விலையை ஏற்றிவிடுகிறார்கள். அது போதாது என்று இப்போது வரியை 10 சதவிகிதமாக்குகிறோம். அதனால் விலை இன்னும் அதிகமாகிறது. அரசாங்கம் இதற்கு என்ன காரணம் சொல்கிறதென்றால், இதற்கு முன்னால் 25,000 ரூபாய் வரை டர்னோவர் இருந்தவர்களுக்கு விதிவிலக்கு அளித்திருந்தோம், இப்போது 50,000 ரூபாய் வரை டர்னோவர் இருப்பவர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதால் எப்படியும் நஷ்டத்தை ஈடுசெய்ய இந்த அதிகப்படி வரியை விதிக்கின்றோம், 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் ஆக்குகின்றோம் என்று சொல்கிறார்கள். இது 'நாசூரல்' ஐந்து வருடங்களுக்கு முன்னால் எவ்வளவு சரக்கு 25,000 ரூபாய்க்கு ஒருவர் விற்றாரோ, அதே சரக்கு இன்றைக்கு 50,000 ரூபாய்க்கு விற்கிறது. எந்தக் கடைக்குப் போனாலும் எல்லாப் பொருட்களின் விலையும் இரண்டு மடங்கு, மூன்று மடங்காகிவிட்டது. 25,000 ரூபாய்க்கு எவ்வளவு சரக்கு ஒருவன் விற்றானோ, அவ்வளவு சரக்குதான் இப்போது 50,000 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கிறான். இது அதிகப்படி ஆவதால், அதற்காக இந்த வரியைக் கூட்டுகிறோம் என்று சொல்வது சரியல்ல. இது அவ்வளவும் விலை ஏற்றத்தால் அவதிப்படுகிற மக்கள் தலையில்தான் போய் விழுகிறது. அகிலிருந்து நிவாரணம் அளிக்கவில்லை. நிவாரணம் அளிப்பதாகவும் 10 லட்சம் ரூபாய்க்கு மேல் தொழில் செய்கிற 4,000 அல்லது 5,000 வியாபாரிகளிடத்தில் வசூலிக்கிறோம் என்றும் சொல்வது சரியல்ல. ஆகையால் 5 சதவிகிதம் என்பதை 10 சதவிகிதமாகக் கூட்டுவதைக் கைவிட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும் இந்த மசோதாவின் பேரில் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். கருத்துக்களைச் சொல்லும்போது, விற்பனை வரி 5 சதவிகிதம் என்று போடப்பட்டிருப்பதை 10 சதவிகிதம் என்று கூடுதலாக்குவது சரியல்ல என்ற வார்த்தை வைத்தார்கள். பொருட்களின் மீது வரி விதிக்கின்ற மசோதா அல்ல இது. 10 லட்சம் ரூபாய்க்கு மேல் டர்னோவர் செய்கிற வியாபாரி மீது 5 சதவிகிதம் அடிஷனல் சேல்ஸ் டாக்சாகப் போடப்பட்டு வந்ததை, இப்போது 10 சதவிகிதமாக அதிகரிக்கத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, கூடுதல் விற்பனைவரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974)

1974 ஏப்ரல் 11] *[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]*

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் மாநில அரசிற்கில்லை; மத்திய அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது; விலைவாசி உயர்வை மாநில அரசு தடுக்கமுடியாத சூழ்நிலையில் அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் போடுவது சரியல்ல என்ற வாதத்தை வைத்தார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டிய அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்குத் தான் இருக்கிறது என்று அவர் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, அதை நான் முழுவதும் வரவேற்கிறேன். மத்திய அரசு அந்தக் கடமையைச் செய்யவேண்டும். விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு. நமது மசோதாவைப் பொறுத்தவரையில், இந்த வரி போடுவதால், இது வாங்குகிறவர்கள் மீது மாற்றப்படும் என்று சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 10 லட்சம் ரூபாய்க்கு மேல் டர்னோவர் இருக்கிற வியாபாரிகள் மீது போடப்படும் 5 சதவிகித வரி, இப்போது 10 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல, விலைவாசி ஏறிக்கொண்டுபோனால், டர்னோவர் அதிகமாகும். விலையில் இந்த டாக்சைச் சேர்த்து, விலைவாசி மேலும் உயர்ந்தால், அதன் விளைவாக டர்னோவர் அதிகமாகி, வியாபாரிகள் வரி அதிகமாகக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுமே தவிர அதனால் அவர்கள் பலனடைய முடியும் என்று நான் நம்பவில்லை. எனவே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நான் முன்னுரையில் சொன்னதுபோல, 2 கோடி ரூபாய், இப்போது இந்தச் சலுகைகள் கொடுப்பதன் மூலம் அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த இழப்பு ஈடுசெய்யப்பட வேண்டும். மற்றொன்று, சாதாரண வியாபாரிகளுக்குச் சலுகைகள் அளித்திருக்கிறோம். ரூ. 10 லட்சத்திற்கு மேல் டர்னோவர் இருப்பவர்கள் சாதாரண வியாபாரிகள் என்று சொல்வதற்கில்லை. எனவே, இந்த அரசு 5 சதவிகிதம் என்றிருந்ததை 10 சதவிகிதம் என்று ஆக்க இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் அரசியல் சட்டப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். ஐந்து சதவிகிதம் போட்டதால் ஐக்கோர்ட்டோடு நின்றுவிட்டார்கள், 10 சதவிகிதம் போட்டால் சுப்ரீம் கோர்ட்டு வரையில் போவார்கள் என்று சொன்னார்கள். இப்போதே போயிருக்கிறார்கள். சுதர்சன் இண்டஸ்ட்ரீஸ் எட்டெடிரா கேஸில் ஐக்கோர்ட்டு நமக்குச் சாதகமாக தீர்ப்புக் கொடுத்து, அதன் பேரில் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டு, அங்கே ஆர்குமெண்ட்ஸ் முடிந்திருக்கிறது. ஜட்ஜ்மெண்ட் ரிசர்வ் செய்திருக்கிறார்கள். அந்த ஜட்ஜ்மெண்டும் எங்களுக்குச் சாதகமாகக் கிடைக்கும்

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 11

என்ற நம்பிக்கையோடுதான் அரசாங்கம் வழக்கை நடத்தியிருக்கிறது. எந்த வழக்கு மன்றத்திற்குச் சென்றாலும், எந்தக் கட்சிக்காரனும் தன்னுடைய வழக்கு தோற்றுவிடும் என்று சொல்லமாட்டான். அவருக்கு ஆஜாராகிற வக்கில் கூட, இங்கே இல்லாவிட்டால், இன்னொரு கோர்ட்டில் பார்ப்போம் என்று சொல்வார்களே தவிர, வழக்கு தோற்கும் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். எங்களுக்கும் மிகுந்த நம்பிக்கையிருக்கிறது. இந்த வழக்கில் **வெற்றிபெறுவோம்; அரசாங்கம் போட்டிருக்கின்ற அடிஷனல் சேல்ஸ்** டாக்ஸ் சுப்ரீம் கோர்ட்டால் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்ன கருத்துக்களை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்ற வருத்தத்தோடு தெரிவித்துக் கொண்டு, இந்த மசோதாவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு, கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/74) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/74) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

1974 ஏப்ரல் 11]

(5) தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1974)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு @ (சட்டப் **பேரவைச் சட்ட முன்வடிவு எண் 8/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட** வேண்டும்."

என நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/20) 81 (2) வது பிரிவின்படி கட்டிடங்கள் அல்லது நிலம் இவை இரண்டின் ஆண்டு மதிப்பில் மேற்படி சட்டத்தில் 78-வது பிரிவின் விதித்துறைகளுக்கு உட்பட்டு, நகராட்சி மன்றத்தினால் வரிவு செய்யப்படக் கூடிய சதவீதங்களில் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும். அரசுக் கட்டிடத்தில் அல்லது இரயில்வே கட்டிடத்தில் அல்லது சாதாரணமாக வாடகைக்கு விடப்படாத வகையைச் சேர்ந்ததும், நிர்வாக அதிகாரியின் கருத்துப்படி அதன் ஆண்டு மொத்த வாடகைத் தொகை மதிப்பிட முடியாததுமான ஒரு கட்டிடத்தைப் பொறுத்த வரையில் அதன் ஆண்டு வாடகை மதிப்பு நிலத்தின் மதிப்பிட்டு விலையும் அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு தற்காலத்தில் ஆகும் தோராயச் செலவும் சேர்ந்த மொத்தத் தொகையில் தேய்மானத்திற்கு நியாய **மான தொகை கழித்துக்கொண்டது போக எஞ்சியுள்ள தொகையில் ஆறு** சதவீதம் என்று கருதப்பட வேண்டும்; மேலே சொல்லப்பட்ட தேய்மானக் கழிவுத் தொகை எந்த ஒரு நேர்விலும் மேற்படி கட்டுமானச் செலவில் பத்து சதவீதத்திற்குக் குறைவாக இருக்கக்கூடாது; மேலும் இயந்திரங்கள், மரச் சாமான்கள், இவற்றின் விலையை ஆண்டு வாடகை மதிப்பைக் கணக்கிடு வதற்குச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்ற மேற்படி சட்டத்தின் 82 (2)-வது பிரிவின் வரம்பு நிபந்தனை வகை செய்கிறது.

தொழிற் பேட்டைகளில் உள்ள கட்டிடங்களைப் பொறுத்தவரையில், நீர் வழங்கல், விளக்கு வசதி போன்ற வசதிகளை தொழில் துறையே செய்து கொடுக்கிறது. இவற்றை நகராட்சிகள் செய்து கொடுப்பதில்லை. எனவே, அத்தகைய கட்டிடங்களுக்குச் சொத்து வரியை மதிப்பிடுகையில் சில சலுகைகள் வழங்குவது அவசியமெனக் கருதப்படுகிறது. ஆகவே அத்தகைய

@ . . . ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1974 ஏப்ரல் 11

சொத்துக்களின் ஆண்டு மதிப்பைக் கணக்கிடுவதற்காக, அச்சொத்துக்களின் மூலதன மதிப்பில் 6 சதவீதத்திற்குப் பதிலாக 4 சதவீதம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவை கூறி, இதனை இம்மன்றமும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 8/74) நிறைவேற்றப்பட்டது."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/74) நிறைவேற்றப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 22—4—1974 திங்கட்கிழமை மாலை 4 மணிக்குக் கூடும்.

7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

236. Notification issued with G.O. Ms. No. 479, Co-operation, dated the 29th December 1973, in regard to certain amendments to rules 85-D, 85-F and 85-K of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

237. Order issued with G.O. Ms. No. 600, Revenue, dated the 11th February 1974, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge in respect of the film show entitled 'Hindustan Ki Kasam'. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

238. Notification issued with G.O. Ms. No. 5435, Revenue, dated the 4th September 1973, in regard to an amendment to the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Rules, 1972. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Act, 1972 (Tamil Nadu Act 21 of 1972).]

239. Order issued with G.O.R. No. 93, Revenue, dated the 24th January 1974, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge on cinematograph film show proposed to be held by the Dean, Kilpauk Medical College, Madras-10 on 26th January 1974 at Uma Talkies to raise funds for the Athletic Association of the College. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1959).]

240. Notification issued with G.O. Ms. No. 2797, Rural Development and Local Administration, dated the 18th December 1973, regarding deletion from the approved list of Open Spaces and inclusion in the list of Parks in the area within the jurisdiction of the Thanjavur Municipality under sub-section 5 of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959. [Laid on the table of the House under section 14(3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

241. Notification issued with G.O. Ms. No. 47, Rural Development and Local Administration, dated the 8th January 1974, in regard to declaration of Regional Planning area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

B. Reports, Notifications and Other Papers.

133. Notification issued with G.O. No. 7237, Revenue, dated the 4th December 1973, rescinds the Revenue Department Notification II-1 No. 1884 of 1960, published at page 623 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 26th October 1960.

134. Further particulars collected in pursuance of the answer given to Legislative Council Starred Question No. 106 tabled by Thiru M. K. D. Natarajan, M.L.C., and answered on 30th January 1974, regarding re-auction of Liquor Shops.

*135. The Registration (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A. Bill No. 7 of 1974), as passed by the Assembly.

*136. The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A. Bill No. 11 of 1974), as passed by the Assembly.

*137. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974 (L.A. Bill No. 14 of 1974), as passad by the Assembly.

* Laid on the table of the House on 10th April 1974.

இணைப்பு I

[. 52 ஆம் பக்கத்தில் 304 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினுவின் விடையைக் காண்க.]

31-3-1973 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தமிழ் நாடு (அரசுப் பள்ளியில்லாத பிற பள்ளிகளில் இருந்து) ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்க மாநாட்டில் எழுப்பப்பட்ட கோரிக்கைகளும் அவை பற்றி தற்போதைய நிலைமையும் :

